2019 - இதழ் 07

இலவசம்

## ஆடி - 2019

# உள்ளான மனிதன்

## மென்பிரதி

GRACE TABERNACLE
APOSTOLIC CHURCH

gtachurch.ca

# உள்ளான மனிதன்

மாதாந்த சஞ்சிகை - இலவசம்

2019 - இதழ் 07

**இயேசு சொன்னார்:**

**வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.**

## கிறேஸ் (ற்)ரபனக்கல்

## வெளியீடு

SCARBOROUGH, ONTARIO, CANADA ☎ 416.613.2909

(f)பின்ச் / மிட்லான்ட் சந்திப்புக்கு அருகில்

நீங்கள் தற்போது கிறிஸ்தவ **ஆவிக்குரிய** ஐக்கியமொன்றிலே இணைந்திருந்தால், அங்கே கருத்தோடு தேவனை சேவித்து, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தி, இயேசு கிறிஸ்துவுக்குள், உங்களைக் குறித்ததான பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுங்கள்.

# இந்த இதழில்...

**2019 - இதழ் 07**


## 4 மனதுருதுருக்கமுள்ள தேவன்

மனிதரின் நிலையையும் அவர்களின் பெலவீனங்களையும் அறிந்த தேவன், தகப்பன் தன் பிள்ளைக்கு இரங்குவதுபோல் எமக்கு இரங்குகின்றார்.

## 6 இருதயத்தின் வாஞ்சைகள்

எனவே எங்கள் இருதயத்தில் நினைவுகளையும், அந்த நினைவுகளை உண்டு பண்ணும் காரணிகளைக் குறித்தும் நாங்கள் மிகவும் எச்சரிகை யுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

## 10 பிரசங்கக் குறிப்புகள்

தேவனிடத்திலிருந்து நாங்கள் பெற்ற அழைப்பை நிறைவேற்றுவோம். எங்கள் பொறுப்புக்கள் கடமை களை சரிவர செய்வோம். மற்றவர்களை நடத்துகின் வர்களாக மாத்திரமல்ல நாங்களும் அதன்படி நடக்கி ன்றவர்களாக வாழ்வோம்.

## 12 புதிய நாளுக்குள்...

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.



**கிறேஸ் (ற்)ரபனக்கல்**

**210 Silver Star Blvd., Unit #807**
**Scarborough, ON M1V 5J9 Canada**

☎ 416.613.2909 info@gtachurch.ca


gtachurch.ca

# புதிய நாளுக்குள்...

அனுதின தியானக் குறிப்புக்கள்

## தலைப்பு அகராதி 12ம் பக்கத்திலிருந்து...


**மனக்குழப்பமான, சோர்வான நேரங்களில்**

... ஆடி 5, 8, 10, 12, 14, 16, 19, 20, 24

**போராட்டங்களில், பிசாசின் தந்திரங்களில் வெற்றி**

... ஆடி 1, 2 , 3, 8, 10, 12, 16, 19

**பாவத்திலிருந்து விடுதலையடையும் வழி உண்டு**

... ஆடி 7, 11

**முக்கிய தீர்மானங்களை எடுக்கும் முன்**

... ஆடி 14, 16, 20, 30

**சமரசமான வாழ்க்கை வேண்டாம்**

... ஆடி 19

**தெய்வீக ஆசீர்வாதங்கள்**

... ஆடி 6, 9, 13, 15, 25

**தேவனுடைய சித்தம் நிறைவேறட்டும்**

... ஆடி 18, 21, 22, 28, 30

**தேவனுக்குப் பிரியமான வாழ்க்கை**

... ஆடி 4, 5, 8, 15, 16, 22, 23, 25, 27, 28, 31

**சமாதானமும் அமரிக்கையுமான வாழ்க்கை உண்டு**

... ஆடி 9, 16, 25, 27, 29

**பொறுமையோடு காத்திருங்கள்**

... ஆடி 10, 11, 14, 16, 17, 20, 24, 26, 29, 30, 31

**தேவ நீதி வெளிப்படும்**

... ஆடி 4, 29

**திவ்விய சுபாவங்கள் வெளிப்படட்டும்**

... ஆடி 1, 2, 3, 13, 15, 22, 26

**வாழ்வு தரும் திருவசனம், ஐக்கியத்தின் மேன்மை**

... ஆடி 6, 8, 12 , 13, 18, 21, 23, 31

**மேட்டிமை, வன்மம், பகை தலைதூக்கும் போது...**

... ஆடி 1, 2, 3, 4, 14, 17, 27


gtachurch.ca

# மனதுருக்கமுள்ள தேவன்

*போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்*

கர்த்தர், இரக்கமும் கிருபையும் நீடிய சாந்தமும் மகா தயையும் சத்தியமுமுள்ள தேவன். ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக்காக்கிறவர். அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர். அவரது இரக்கங்களினால் நாம் பிழைத்திருக்கின்றோம்.

மனிதரின் நிலையையும் அவர்களின் பெலவீனங்களையும் அறிந்த தேவன், தகப்பன் தன் பிள்ளைக்கு இரங்குவதுபோல் எமக்கு இரங்குகின்றார்.

## இயேசு மனதுருகி கைம்பெண்ணிற்குதவினார்

கர்த்தர் நாயீன் என்னும் ஊருக்குப் போனார், அவருடைய சீஷரும் அநேகரும் திரளான ஜனங்களும் அவருடனேகூடப் போனார்கள். அவர் ஊரின் வாசலுக்குச் சமீபித்தபோது, மரித்துப்போன ஒருவனை அடக்கம்பண்ணும்படி கொண்டுவந்தார்கள், அவன் தன் தாய்க்கு ஒரே மகனாயிருந்தான். அவளோ கைம்பெண்ணாயிருந்தாள், ஊராரில் வெகு ஜனங்கள் அவளுடனேகூட வந்தார்கள். கர்த்தர் அவளைப் பார்த்து, அவள் மேல் மனதுருகி: அழாதே என்று சொல்லி, அவனை உயிரோடு எழுப்பினார்.

இயேசு அப்பெணணின் நிலையையும் அவள் வேதனையையும் அறிந்து மனதுருகி உதவி செய்தார்.

## இயேசு மனதுருகி குஷ்டரோகியை தொட்டு குணப்படுத்தினார்

குஷ்டரோகி ஒருவன் கர்த்தரிடத்தில் வந்து, அவர் முன்பாக முழங்கால்படியிட்டு, உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும் என்று வேண்டிக்கொண்டான். இயேசு மனதுருகி, கையை நீட்டி, அவனைத் தொட்டு, எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார். இப்படி அவர் சொன்னவுடனே, குஷ்டரோகம் அவனை விட்டு நீங்கிற்று, அவன் சுத்தமானான்.

அந்நாட்களில் குஷ்டரோகமானது மிகவும் அபாயகரமான நோயாயிருந்தது. குஷ்டரோகிகள் தீட்டுள்ளவர்களாய் தள்ளப்பட்டிருந்தனர். இயேசு குஷ்டரோகி மீது மனதுருகி தொட்டு குணமாக்கினார்.

## இயேசு மனதுருகி ஜனங்களுக்காய் ஜெபித்தார்

இயேசு திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்துபோனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகினார். அவர்கள் மீட்பைக் கண்டடையும்படி ஜெபித்தார்.

## இயேசு மனதுருகி உதவினார்

இயேசு படவில் ஏறி, வனாந்தரமான ஓர் இடத்துக்குத் தனியே போனார். ஜனங்கள் அதைக் கேள்விப்பட்டு, பட்டணங்களிலிருந்து கால்நடையாய் அவரிடத்திற்குப் போனார்கள். இயேசு வந்து, திரளான ஜனங்களைக் கண்டு, அவர்கள்மேல் மனதுருகி, அவர்களில் வியாதியஸ்தர்களாயிருந் தவர்களைச் சொஸ்தமாக்கினார். சாயங்காலமானபோது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து: இது வனாந்தரமான இடம், நேரமுமாயி ற்று, ஜனங்கள் கிராமங்களுக்குப் போய்த் தங்களுக்குப் போஜனபதார்த்தங் களைக் கொள்ளும்படி அவர்களை அனுப்பிவிடவேண்டும் என்றார்கள். இயேசு அவர்களை நோக்கி: அவர்கள் போகவேண்டுவதில்லை, நீங்களே அவர்களுக்குப் போஜனங்கொடுங்கள் என்று சொல்லி அவர்கள் எல் லோரையும் போசித்தார். இயேசு மனதுருகி குணமாக்கினார். ஆறுதல் கொடுத்தார்.

## இயேசு மனதுருகி குருடரை குணப்படுத்தினார்

இயேசு எரிகோவிலிருந்து புறப்பட்டுப்போகையில், திரளான ஜனங்கள் அவருக்குப் பின்சென்றார்கள். அப்பொழுது வழியருகே உட்கார்ந்திருந்த இரண்டு குருடர், இயேசு அவ்வழியே வருகிறார் என்று கேள்விப்பட்டு: ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும் என்று கூப் பிட்டார்கள் இயேசு நின்று, அவர்களைத் தம்மிடத்தில் அழைத்து: நான் உங்களுக்கு என்ன செய்யவேண்டும் என்றிருக்கிறீர்கள் என்றார். அதற்கு அவர்கள்: ஆண்டவரே, எங்கள் கண்களைத் திறக்கவேண்டும் என்றார்கள். இயேசு மனதுருகி, அவர்கள் கண்களைத் தொட்டார், உடனே அவர்கள் பார்வையடைந்து, அவருக்குப் பின்சென்றார்கள்.

பிரியமான சகோதரனே சகோதரியே,

இயேசு மனதுருக்கம் நிறைந்தவர். பாவங்களை மன்னித்து புது வாழ்வ ளித்து நடத்துபவர். அவர் தரும் விடுதலை நிரந்தரமானது. அவர் தரும் வாழ்வு புதிதானது. அவர் தரும் சந்தோஷம் நிறைவானது.

**எம்மோடு கூட ஜெபிக்க விரும்பினால் ஞயிறு காலை 10:00 மணிக்கு தேவ ஆராதனையில் கலந்து கொள்ளும்படி உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.**

**கிருபையின் கூடார அப்போஸ்தல சபை**

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909**

gtachurch.ca

# இருதயத்தின் வாஞ்சைகள்

மனிதர்களுடைய அன்றாட பாடுகள் அவர்களை இளைத்துப் போகப் பண்ணுகின்றது. ஓய்வு நாட்களிலே ஆராதனைக்கு செல்லும் போதும், கிழமை நாட்களிலே, மாலை வேளைகளிலே ஜெப கூட்டத்திற்கு செல் லும் போதும் பலர் சோர்வடைந்த நிலையில் காணப்படுகின்றார்கள். ஆனால் மாலை நேரத்திலே ஒரு விசேஷித்த உதை பந்தாட்ட போட்டி இருக்கின்றது, நண்பர்களோடு சேர்ந்து விருந்து சாலைக்கு செல்லப் போகின்றேன் அல்லது ஏனைய பொழுது போக்கும் காரியங்களை செய்ய இருக்கின்றேன் என்னும் போது களைப்புக்கள் மத்தியிலும் ஒரு புத்துணர்ச்சியும் பரவசமும் உண்டாகி விடுகின்றது. இந்தக் கட்டுரை உங்கள் குற்ற உணர்வை தூண்டும்படியாய் எழுதப்படவில்லை, மாறாக எங்கள் வாழ்வின் வாஞ்சைகளை நாங்களே மறு பரிசீலனை செய்யும் நல்ல நோக்கத்துடனே எழுதப்பட்டிருக்கின்றது.

மனிதர்கள் தாங்கள் அதிக பிரியத்துடன் செய்யும் இந்த உலகத்திற் ரிய காரியங்களையோ அல்லது பரலோகத்திற்குரிய காரியங்களையோ ஒன்றும் தடை செய்ய முடியாது. அவர்கள் இருதயம் வாஞ்சிக்கும் காரி யங்களை அதிகாலை நேரமோ, மதிய வேளையிலோ அல்லது நடுச் சாமமோ தடை செய்ய முடியாது. என் உயிர் போனாலும் இதை நான் செய்து தீருவேன் என்று தங்கள் இருதயத்திலே தீர்மானம் செய்து கொள்கின்றார்கள். இந்த வாஞ்சை இருதயத்திலே எப்படி வளர்ந்து பெருகியது?

ஒருவிதையானது நிலத்திலே விதைக்கப்பட்டு, அது வளர்வதற்கு தேவை யான காரணிகள் யாவும் அங்கே கொடுக்கப்பட்டு, வளர்ந்து வரும் இளங் கன்றுகள், பாதுகாப்படுகின்றது. பின்பு அது வளர்ந்து பெரும் விரு ட்சமாகி அந்த நிலப்பரப்பை தனதாக்கிக் கொள்கின்றது. இதற்கொத்த தாகவே எங்கள் இருதயமாகிய நிலத்தில் உள்வாங்கப்படும் வித்துக்க ளும் இருக்கின்றது. இந்த உலகத்திற்குரிய காரியங்களை விதைத்து அதை பராமரிப்பவன் அதனால் மேற்கொள்ளப்படுவான். பரலோகத்திற்கு ரிய காரியங்களை விதைத்து அதை பராமரிப்பவன், பரலோகத்திற்குரிய வைகளால் மேற்கொள்ளப்படுவான். மனிதனுடைய பொக்கிஷம் எங் கேயோ அங்கே அவனுடைய இருதயமும் இருக்கும். (கலாத்தியர் 6:7-8), மத்தேயு 6:21)

எனவே எங்கள் இருதயமானது, எவைகளினால் நிறைந்திருக்கின்தோ அவைகளே எங்கள் நிலையை விளக்கிக் கூறும். தேவனோடு வாழும் வாழ்க்கை என்பது, எங்கள் வாழ்க்கையின் ஒரு பகுதி அல்ல. தேவ னோடு வாழ்வதே எங்கள் வாழ்க்கையாக மாற வேண்டும்.

வார இறுதி நாட்களிலே, சில சிறார்கள், காலை எழுந்ததும் எந்தவித முறைப்பாடும் இல்லாமல் கொடுக்கும் ஆகாரத்தை உண்டுவிட்டு, அவசரவசரமாக தங்கள் பாடசாலை வேலைகள், மற்றும் பெற்றோர் கொடுத்த சிறு பொறுப்புகள் யாவையும் முடித்துவிடுவார்கள். ஏனெனில், இவைகளைவிட அவர்கள் மனதிற்கு பிரியமான பொழுதுபோக்குகளில் அதிக நேரம் செலவிடவேண்டும் என்ற ஆர்வம் அவர்களுக்கு உண்டு. கிறிஸ்தவ வாழ்க்கை என்பது, இந்த பிரகாரமாக வாழும் வாழ்க்கை

அல்ல. ஆலயம் சென்று விட்டேன், வேதத்தை வாசித்து விட்டேன், ஜெபம் செய்து விட்டேன் என்பதுடன் முடிவடைவதில்லை. இவைகளை நீங்கள் செய்து வருவது நல்லது. அத்துடன் நின்றுவிடாது, நாங்கள் கற்றுக் கொண்ட வேதப் பிரமாணங்களின்படி எங்கள் வாழ்க்கையை (வீட்டில், வேலையில், பாடசாலையில், வெளி இடங்களில், ஆலயத்தில்) வாழ வேண்டும்.

கடமைக்காக அல்ல, சுபாவமாக தேவனை அறிகின்ற அறிவின் மேன்மைக்காக யாவற்றையும் நஷ்டம் என்றும் குப்பையென்றும் விட்டுவிட வேண்டும். எப்படியாக ஒரு மணவாட்டி கறைதிறை அற்றவளாக, தான் நேசிக்கும் மணவாளனுடன் திருமண நாளை எதிர் பார்த்து காத்திருக்கின்றாளோ, அதற்கொப்பனையாக நாங்கள் எங்கள் நேசர் இயேசுவின் மேல் வைக்கும் நேசம் நாங்கள் விரும்பும் வேறு எந்த காரியங்களையும் விட எங்கள் இருதயத்தின் முதன்மையான வாஞ்சையாக மாற வேண்டும்.

மனிதர்களுடைய செய்கைகள் அவர்களுடைய இருதயங்களின் சிந்தனைகளால் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆனால் இருதயத்தில் தோன்றும் சிந்தனைகளை மனிதர்களால் கட்டுப்படுத்த முடியும். எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும். (நீதி 4:23) என்று பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

எனவே எங்கள் இருதயத்தின் நினைவுகளையும், அந்த நினைவுகளை உண்டு பண்ணும் காரணிகளைக் குறித்தும் நாங்கள் மிகவும் எச்சரிகையுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

சிந்தனை என்ற வார்த்தைக்கு ஒத்ததாக; நினைவுகள், எண்ணங்கள், என்ற பதங்களையும் நாங்கள் உபயோகிப்பதுண்டு. இருதயத்தில் பல நினைவுகள் தோன்றும் போது, அந்த நினைவுகளை வலுவூட்டும் காரணிகள் என்ன? அவற்றிலிருந்து நாங்கள் எங்கள் இருயத்தை காத்துக் கொள்ளும்படி வேதம் கூறும் அறிவுரைகள் என்ன? என்பதை சுருக்கமாக பார்ப்போம்.

விதைப்பவன் என்னும் உவமையிலே, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாமே, இருதயத்தை நிலத்திற்கும், தேவ வார்த்தையை விதைக்கும் ஒப்பிட்டு பேசினார். தேவ வார்த்தை நேற்றும் இன்றும் என்றும் மாறாதது. ஆனால் எங்கள் இருதயம் எப்படியாக இருக்கின்றது என ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

நீங்கள் தோட்டம் செய்யும் படி ஒரு நிலத்தை தெரிவு செய்தால், அந்த நிலம் எப்படிப்பட்ட நிலமாக இருக்க வேண்டும் என்று விரும்புவீர்கள்? , வழியோரமான நிலமா? கற்பறை நிறைந்த நிலமா? முட்புதரான நிலமா? வளமான நிலமா? நிச்சயமாக வளமான நிலத்தையே விரும்புவீர்கள். வளமான நிலத்தை தெரிவு செய்த பின்பு, அந்த நிலத்தில் மிளகாய் விதைகளை விதைத்த பின், நீர்பாய்ச்சுகின்றீர்கள், பசளைகளை போடுகின்றீர்கள். அது மட்டுமல்ல, நல்ல விளைச்சலை கண்டடையும் வரை அந்த தோட்டத்தை பராமரிக்க வேண்டும். நீங்கள் தூங்கினால் எதிரி களைகளை விதைத்து விடுவான். அவைகள் பாதகமற்றது போல தோன்றுகின்றது என்று அப்படியே விட்டுவிட்டால், உங்கள் பிரயாச

ங்களின் நற்பலனை அவைகள் கெடுத்துப் போடும். நாற்றுக்களுக்கு போடப்பட்ட பசளைகளை அவைகள் எடுத்துக் கொள்ளும்.

இதற்கொத்ததாகவே, எங்கள் இருதயத்திலே நாட்டப்பட்ட பரிசுத்தமான தேவ வித்து வளர்ந்து பலன் கொடுக்கும்வரை எங்கள் இருதயத்தை எல்லாக் காவலோடும் காத்துக் கொள்ள வேண்டும். மனதில் தோன்றும் மாம்ச இச்சைகள் (உலக போக்கான காரியங்கள்) ஆரம்பத்திலே பாதகமற்றதாக தோன்றும் காலப்போக்கிலே தேவ வழிநடத்துதலின் முக்கியத்துவத்தை அருகப் பண்ணி, பின்பு தேவனோடுள்ள உறவை முற்றாக துண்டித்து விடும்.

எனவே, தங்கள் இருதயத்தை எல்லா காவலோடும்காத்துக் கொள்ள விரும்புகின்றவர்கள், கண்ணின் காட்சிகளையும், வாயின் வார்த்தை களையும், கேட்கும் வார்த்தைகளையும் குறித்து அவதானமுள்ளவர்க ளாக இருக்க வேண்டும்.

எங்கள் கண்களினால் பார்க்கும் காட்சிகளையும், நாங்கள் வாசிக்கும் கதைகளையும் குறித்து நாங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தவறான சிந்தனைகளுக்கு உணர்வூட்டும் ஊடகமாக எங்கள் கண் களை நாங்கள் உபயோகிக்கக் கூடாது. இயேசு சொன்னார்: கண் ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது. உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும். உன் கண் கெட்டதாயிரு ந்தால், உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும் (மத்தேயு 6:22-23) என்று இயேசு கூறியிருக்கின்றார்.

மனிதர்கள் பேசுகின்ற ஒவ்வொரு வார்த்தைகளையும் குறித்து அவரவர் கணக்கொப்புவிக்க வேண்டும். நாங்கள் என்னத்தை பேசுகின்றோம் என்பதைக் குறித்து கவனமுள்ளவர்களாக இருக்க வேண்டும். எங்கள் வாயின் வார்த்தைகள் தேவனுக்கு பிரியமுள்ளதாக இருக்க வேண்டும். (சங்கீதம் 19:14). ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கத்தை கெடுக் கும். எங்கள் வாயில் தேவனை துதிக்கும் துதி இருக்க வேண்டும். (யாக்கோபு 3ம் அதிகாரம்). நான் நினைத்ததை பேசுவேன் என்ற எண் ணம் எங்களில் வளர இடங் கொடுக்கக் கூடாது. (மத்தேயு 15:18-20)

தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, அதைக் காத்துக்கொள்ளுகிறவர் களே அதிக பாக்கியவான்கள். நாங்கள் கேட்பதற்கு தீவிரமாயும், பேசு வதற்கு பொறுமையுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் எனவே நாங் கள் எதை கேட்கின்றோம் என்பதைக் குறித்து கவனமுள்ளவர்க ளாக இருக்க வேண்டும். தெய்வீக கானங்கள் எங்கள் வாஞ்சையாக இருக்க வேண்டும. தேவனைத் துதிக்கும் பாடல்களை கேட்க வேண்டும். ஒருவன் மூடரின் பாட்டைக்கேட்பதிலும், ஞானியின் கடிந்துகொள்ளு தலைக் கேட்பது நலம். ஆகாத உரையாடல்களை கேட்பதை விட்டுவிட வேண்டும். இந்த உலக ஞானிகளின் அறிவுரைகளை கேட்காமல், திரு வசனத்தை கேட்டு அதன்படி செய்கின்றவர்களாக இருக்க வேண்டும். (லூக்கா 11:28, யாக்கோபு 1:19, பிரசங்கி 7:5)

நாளாந்தம் எங்களுடைய நேரம் எப்படியாக செலவிடப்படுகின்றது என சிந்தித்துப் பாரக்க வேண்டும். நாங்கள் செய்யும் கிரியைகள் யாவும் எம்மை தேவனை அறிகின்ற அறிவில் வளர்க்கின்றதா அல்லது அவை பாதகமற்ற களைகள் போல தோன்றுகின்றதா?

உலக பாடல்களை கேட்டல், திரைப்படங்கள் நாடகங்களை பார்த்தல், ஆகாத சம்பாஷணைகளில் நேரம் செலவிடுதல், விளையாட்டு நிகழ்ச்சி களை பார்த்தல், மற்றும் பலதரப்பட்ட பொழுது போக்குகளில் உங் கள் நேரத்தை செலவிடுதல் போன்றவை உங்கள் இருதயத்தின் பரவ சம் நிறைந்த ஆசையாக இருக்கின்றதா? நாங்களே எங்கள் நிலையை நிதானித்துப் பார்க்க வேண்டும். தேவனுடைய அநாதி தீர்மானம் உங்களில் நிறைவேறுவதற்கு அவைகள் உதவி செய்கின்றதா?

நாங்கள் பார்க்கும் காட்சிகள், வாசிக்கும் கதைகள், பேசும் வார்த்தை கள், பாடும் பாடல்கள், கேட்கும் வார்த்தைகள், கேட்கும் பாடல்கள் எங்க ளுடைய இருதயத்தின் தியானத்திற்கு உணவாக மாறுகின்றது. தன் இருதயத்திலே நல்ல பொக்கிஷத்தை பெருகப் பண்ணுகின்றவன், தேவ னுடைய வார்த்தையின்படி தன் பார்வையையும் பேச்சையும் கேட்கின்ற வைகளையும் காத்துக் கொள்கின்றான். தங்கள் இருதயத்தில் இந்த உல கத்திலுள்ள அழிந்துபோகும் மாம்ச இச்சைகளை வாஞ்சிக்கின்றவர்கள், இந்த உலகத்துக்குரியவைகளை கேட்டு, அதை வாஞ்சையோடு நாடித் தேடுகின்றார்கள். சரீரத்திலே பெலன் இருக்கும் போது நாங்கள் எவை களை வாஞ்சிக்கின்றோமோ, அது முதிர்வயதிலும் எங்களை தொடர்ந்து பிடித்துக் கொள்கின்றது. எனவே தேவனை அறிகின்ற அறிவில் வளர்வ தையே நாடித்தேடுங்கள்.

என் வாய் உமது துதியினாலும், நாள்தோறும் உமது மகத்துவத்தினா லும் நிறைந்திருப்பதாக. முதிர்ந்தவயதில் என்னைத் தள்ளிவிடாமலும், என் பெலன் ஒடுங்கும்போது என்னைக் கைவிடாமலும் இரும். (சங்கீதம் 71:8-9) என்று தாவீது ராஜா தன் சங்கீதத்திலே குறிப்பிட்டிருக்கின்றார்.

மனிதனுடைய பொக்கிஷம் எங்கேயோ அங்கே அவனுடைய இருதயமும் இருக்கும். (மத்தேயு 6:21) மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழி வை அறுப்பான் ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான். (கலாத்தியர் 6:7-8)

தற்போது நீங்கள் எந்த வயதுடையவர்களாக இருந்தாலும், இனியும் காலத்தை விரயப்படுத்தாமல், தேவனிடம் உங்கள் வாழ்க்கையை முற் றிலுமாய் அர்ப்பணியுங்கள். ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்கு கிறவராயிருக்கிறார். (பிலி 2:13) என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக இந்த உலகத்திலுள்ள மற்ற எல்லா வற்றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண்டிருங்கள்.

கர்த்தருடைய ஆலயத்திலே நாட்டப்பட்டவர்கள் எங்கள் தேவனுடைய பிராகாரங்களில் செழித்திருப்பார்கள். கர்த்தர் உத்தமரென்றும், என் கன்மலையாகிய அவரிடத்தில் அநீதியில்லையென்றும், விளங்கப்பண்ணு ம்படி, அவர்கள் முதிர்வயதிலும் கனி தந்து, புஷ்டியும் பசுமையுமாயிரு ப்பார்கள். (சங்கீதம் 92:13-15)

உங்கள் இருதயத்தின் வாஞ்சைகளை அடையும்படிக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாமே வழிநடத்துவாராக! ஆமேன்!

# கர்த்தருடைய அழைப்பு

**பிரசங்கக் குறிப்புக்கள்** - போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்

**[IF YOU WOULD LIKE TO LISTEN TO THE FULL VERSION OF THIS MESSAGE IN ENGLISH OR TAMIL, FOLLOW THE LINK THAT IS PROVIDED AT THE END THIS SERMON NOTES]**

## பிரதான வசனம் : மத்தேயு 11:28

நாங்கள் ஒவ்வொருவரும் தேவனுடைய சீஷர்களாகும்படி அழைப்பை பெற்றிருக்கின்றோம். எங்கள் ஒவ்வொருவருக்குரிய பொறுப்புக்களும் கடமைகளும் உண்டு. நாங்கள் ஒவ்வொருவரும் கர்த்தருடைய ஆலய த்தில் செய்ய வேண்டிய வேலைகள் உண்டு. அது மட்டுமல்ல எங்கள் குடும்பத்திலும் எங்களுக்கு அழைப்பு உண்டு. ஒரு குடும்பத்திலேயுள்ள தாய் தந்தையர்கள், தேவனுடைய வழியில் நடக்கும் பெற்றோர்களாக அழைக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆதியிலே தேவன் ஒரு சந்ததியை சிருஷ்டிக்காமல் ஆணும் பெண்ணுமாக இருவரை சிருஷ்டித்தார். ஏன் அப்படியாக சிருஷ்டித்தார்? ஒரு பக்தியுள்ள சந்ததியை அவர்கள் வழியாக உருவாக்கும்படியாய் அப்படிச் செய்தார். பரிசுத்த ஜாதியாக இந்த பூமியை நிரம்பும்படி அவர்களை ஆசீர்வதித்தார். எனவே, பக்தியு ள்ள வாழ்க்கை அவரவர் குடும்பத்திலே ஆரம்பிக்க வேண்டும். ஒவ் வொரு தாய் தந்தையரும் கிறிஸ்தவ தாய் தந்தையராக தங்கள் குடு ம்பத்தை தேவனுடைய வழியிலே நடத்தும்படி அழைப்பை பெற்றிருக்கி ன்றார்கள். பிள்ளைகளுடைய வாழ்க்கையிலும் அழைப்பு உண்டு. கீழ்ப்படிவுள்ள தேவ பிள்ளைகளாக, இந்த உலகத்திலுள்ள மற்றய பிள் ளைகளுக்கு முன்பாக எடுத்துக்காட்டான வாழ்க்கை வாழும்படி அழை ப்பை பெற்றிருக்கின்றார்கள்.

**இப்படியாக எங்கள் ஒவ்வொருவருக்கும் அழைப்பு உண்டு. வேதத்திலே பல இடங்களிலே அழைப்பைக் குறித்து கூறப் பட்டிருக்கின்றது.**

கர்த்த ராகிய இயேசு கிறிஸ்து சீஷர்களை அழைத்த போது, அவர்கள் அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, உடனடியாக எல்லாவற்றையும் விட்டுவிட்டு, அவரை பின்பற்றிச் சென்றார்கள். நடத்துகின்றவர்கள் முத லாவது அவர்கள் நடக்கின்றவர்களாக இருக்காவிட்டால், தேவனுடைய அழைப்பை சரிவர நிறைவேற்ற முடியாது. இயேசு இந்த உலகத்திலே வாழ்ந்த நாட்களிலே, இருந்த பல மதத் தலைவர்கள், மற்றவர்களை நடத்துகின்றவர்களாய் மாத்திரம் இருந்தார்கள் ஆனால் அவர்களோ தாங்கள் போதிக்கும் வழியிலே நடக்கின்றவர்களாய் இருக்கவில்லை. "ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியை யும் சுற்றித்திரிகிறீர்கள் அவன் உங்கள் மார்க்கத்தானானபோது அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள்." என்று அவர் களைக் குறித்து கூறினார். அவர்கள் தங்களை தங்கள் மதத்தின் பாது காவலர்களாக எண்ணிக்கொண்டார்களே தவிர, தங்கள் வாழ்க்கையில்

தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடக்கவில்லை. இவர்கள் இந்த மனநிலையுடையவர்களாக வாழ்ந்தபடியால், இயேசுவின் வார்த்தைக ளைக் கேட்டும், அவருடைய அற்புதங்களை கண்டும், இயேசுவின் அழைப்பிற்கு கீழ்ப்படிய மனதில்லாதவர்களாக இருந்தார்கள். இவர்கள் மற் றவர்களை நடத்த விரும்பினார்கள் ஆனால் தாங்கள் அந்த வழியிலே நடக்க விரும்பவில்லை.

## இந்த நாளிலே நாங்கள் தேவனுடைய அழைப்பை ஏற் றுக் கொள்ளுகின்றவர்களாக இருந்தால், முதலாவதாக நாங்கள் தேவனுடைய வழியிலே நடக்கின்றவர்களாக வாழ வேண்டும்.

கர்த்தருடைய சீஷனாக இருந்த பவுல், அவருடைய முற்பட்ட வாழ்க் கையிலே அவர் ஒரு பரிசேயனாக இருந்தார். கிறிஸ்துவை பின்பற்றுகி ன்றவர்களை துன்புறுத்தி வந்தார். ஒரு முறை கிறிஸ்தவர்களை சிறைப் பிடிக்க சென்று கொண்டிருக்கும் போது, வானத்திலே இருந்து வந்த பேரொளியை கண்டு தரையிலே விழுந்து போனார். அப்போது அவர் “ஆண்டவரரே நீர் யார்?” என்று கேட்டார். அப்பொழுது கர்த்தர்: “நீ துன்பப்படுத்துகின்ற இயேசு நானே” என மறுத்தரவு கொடுத்தார். இயே சுவே தேவன் என்று அறிந்த மாத்திரத்திலே, “நான் என்ன செய்ய நீர் சித்தமாய் இருக்கின்றீர்” என்று சற்றும் தாமதம் இன்றி பவுல் தன் வாழ்க்கையை இயேசுவிடம் ஒப்புக் கொடுத்தார். கர்த்தருடைய அழை ப்பை பெற்றுக் கொள்ளுக்கின்ற ஒவ்வொருவரும், கேட்க வேண்டிய கேள்வியும் செய்ய வேண்டிய காரியமும் இதுவே.

நித்திய ஜீவனை கொடுக்கும் இயேசுவின் வார்த்தையை கேட்ட மனிதர் கள் பலர் உணர்வற்றவர்களாகவே இருந்தார்கள். கர்த்தராகிய இயேசு வழியாக நித்திய ஜீவனுக்குரிய அழைப்பை பெற்றிருக்கின்றோம். அவ ருடைய வார்த்தையானது இன்றும் எங்களோடு பேசி எங்களை வழி நடத்துகின்றது. அந்த வார்த்தைகளை நாங்கள் கேட்டுவிட்டு, என்ன த்தை கேட்டோம் என்ற உணர்வற்றவர்களாக வாழ்வோம் என்றால் நாங்களும் தேவனுடைய அழைப்பை அசட்டை செய்கின்றவர்களாக இருப் போம். நாங்கள் அவ்வண்ணமாக வாழாதபடிக்கு, தேவனிடத்திலிருந்த நாங்கள் பெற்ற அழைப்பை நிறைவேற்றுவோம். எங்கள் பொறுப்புக்கள் கடமை களை சரிவர செய்வோம். மற்றவர்களை நடத்துகின்வர்களாக மாத்திர மல்ல நாங்களும் அதன்படி நடக்கின்றவர்களாக வாழ்வோம்.

[இந்த தேவ செய்தியின் முழுமையான ஒலிப்பதிவை பின்வரும்
இணையத் தளத்தில் (INTERNET WEBSITE இல்)
தமிழ் ஆங்கில மொழிகளில் கேட்கலாம்.]

# தெய்வீக சுபாவம்

ஒரு மனிதன் தனக்கு உண்டாகும் கோபத்தை மேற்கொள்ளும்படி வழி தேடுவதற்கு பதிலாக, தன்னுடைய கோபத்தை நியாயப்படுத்தும் படிக்கு வேதத்திலே ஏதாவது சம்பவம் உண்டா அல்லது வார்த்தைகள் உண்டா என்று ஆராய்ந்து பார்ப்பானாக இருந்தால், அவன் தன் இச்சையை நிறைவேற்ற காரணத்தை தேடுகின்ற மனிதனுக்கு ஒப்பாயிருப்பான். தேவனுடைய சுபாவங்களின் கனி எப்போதும் நன்மையானவைகள். அவரிடத்தில் எந்த அநீதியும் இல்லை. அவர் பாவமில்லாத பரிசுத்தராகவே எப்போதும் இருக்கின்றார். தேவ கோபமானது தேவ நீதியை நிறைவேற்றும். அவர் நம்முடைய பாவ ங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் அவருடைய கிருபையை எங்களுக்கு அதிகதிமாக பொழிகின்றபடியால் நாங்கள் நிர்மூலமாகாமல் இருக்கின்றோம். ஆனால் மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிப்பதில்லை. எனவே எங்களுக்கு உண்டாகும் கோபத்தை நியாயப்படுத்த முயலாமல், அதை மேற்கொள்ளும்படிக்கு வாஞ்சிக்க வேண்டும். எங்கள் வதிவிடங்களிலே நெருப்பு இருக்கின்றது. ஆனால் அது சமையலறையிலே ஒரு குறிப்பிட்ட இடத்திற்குள் மட்டுமே உண்டு. மின்சாரம் இல்லாத நேரத்திலே, வெளிச்சத்திற்காக விளக்குகளை கொழுத்துகின்றோம். அங்கே எரியும் நெருப்பு கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது. அதே நெருப்பையும் வீட்டிலிருக்கும் மற்றய அறைகளில் கட்டுப்பாடின்றி விடமுடியுமா? இல்லை! அது வீட்டை முற்றாக எரித்துவிடும். அதே போல எங்களுடைய கோபமும் கட்டுப்படுத்தப்பட வேண்டும். தன் மகனானவன் தவறான காரியத்தை செய்யும் போது, அவனது தந்தையார் கோபமடைந்து, தன்னுடைய கோபத்தின் உக்கிரத்தை வெளிப்படுத்தும்படியாக அல்ல, தன் மகன் மேல் கொண்ட நேசத்தினால் அவனின் தீயசுபாவங்கள் நீங்கி அவன் மேன்மையடைய வேண்டும் என்பதற்காக அவனை கண்டித்து தண்டித்தார். அன்றிரவே, அவன் தந்தையார் மறுபடியும் அவன் மேல் மனதுருகி, அவனை அரவணைத்து அன்பாய்ப் பேசினார். இதுவே எங்கள் தந்தையாகிய தேவனுடைய சுபாவமுமாகும். எனவே, எங்கள் கோபம் காட்டுத்தீயைப் போல பற்றியெரியாதபடிக்கு எங்கள் சுபாவங்கள் நாளுக்குநாள் நன்மைகேதுவானவைகளாக மாறவேண்டும்.

**சங்கீதம் 30:5**

அவருடையகோபம் ஒரு நிமிஷம், அவருடைய தயவோ நீடிய வாழ்வு

**ஜெபம்:** நீதியின் தேவனே, உம்முடைய திவ்விய சுபாவங்களை அறியத்தக்க அறிவையும், அந்த சுபாவங்களை என்னில் வளரத்தக்கதான வழியையும் கற்றுத் தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கோபத்தின் விளைவுகள் என்ன?

மனிதர்கள் நன்மை எது, தீமை எது என்பதின் முடிவுகளை தங்கள், தங்கள் சொந்த அறிவின்படி எடுத்துக் கொள்கின்றார்கள். மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு அதன் முடிவோ மரணம் என்று நீதிமொழிகளின் புத்தகத்திலே வாசிக்கின்றோம். தேவன் ஒருவரே நன்மை எது தீமை எது என்பதை அறிந்தவர். அவருடைய வார்த்தைகளை கைக்கொள்வதினால் நாங்கள் அந்த ஞானத்தை பெற்றுக் கொள்ள முடியும். இன்று பல காரணங்களுக்காக மனிதர்கள் கோபம் கொள்கின்றார்கள். பின்பு அந்த கோபம் நியாயமானது என பல காரணங்களை காட்டி நிரூபிக்க முயல்கின்றார்கள். நான் இப்படியாக பிறந்தேன், நான் இப்படியான சூழ்நிலையில் வளர்க்கப்பட்டேன், மற்றவர்கள் இப்படியான பேச்சுக்களை பேசுவதாலும், இவ்விதமான செய்கைகளை செய்வதாலும் நான் கோபமடைகின்றேன் என்று கூறிக் கொள்வார்கள். காரணங்கள் பல நூறு இருந்தாலும் மனிதனுடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்க மாட்டாது. கோபத்தை நெகிழ்ந்து, உக்கிரத்தை விட்டுவிடு பொல்லாப்புச்செய்ய ஏதுவான எரிச்சல் உனக்கு வேண்டாம். சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்து, மிகுந்த சமாதானத்தினால் மனமகிழ்ச்சியாயிருப்பார்கள் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. கோபத்தோடு சேர்ந்து, கசப்பும், மூர்க்கமும், முறுமுறுப்பும், மன அழுத்தங்களும் மனிதனுடைய இருதயத்திலே குடிகொள்ளும். எனவே, கோபத்தை அப்படியே எங்கள் வாழ்வில் விட்டுவிடக்கூடாது. எங்கள் கோபத்திற்கு காரணம் மற்றவர்கள் என்று கூறுவதை நிறுத்திவிட்டு, வேத வாக்கியங்களின்படி பொறுமையாக இருக்க கற்றுக் கொள்ள வேண்டும். தேவனால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை. எத்தனையோ ஆண்டுகள் கடந்து வந்த தீய பழக்கங்களாயிருந்தும், மனிதர்கள் அதைவிட்டு விட தீர்மானம் செய்து, தேவனை நோக்கி பார்த்த போது, அவர் அவர்களைக் விடுவித்தார். முதலாவதாக, சாட்டுப்போக்கு சொல்வதை நிறுத்தி விடுங்கள். நான் விடுதலையடைய வேண்டும் என்ற தீர்மானத்தை எடுத்துக் கொள்ளுங்கள். திருவசனத்தை மனதார கேட்க ஆரம்பியுங்கள், எனக்கு எல்லாம் தெரியும் என உடனடியாக மறுஉத்தரவு கொடாமல், மறுஉத்தரவு கொடுப்பதற்கு பொறுமையாயிருங்கள். தேவனுடைய பாதத்திலே அமர்ந்திருந்து ஜெபியுங்கள்.

**யாக்கோபு 1:20**

மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாதே.

**ஜெபம்**: என் தேவனாகிய கர்த்தாவே, என் பெலவீனங்களை நியாயப்படுத்த, சாட்டுப் போக்குகளை தேடாமல், அவைகளை ஜெயங்கொள்ளும் படிக்காய் எனக்கு ஞானத்தைத் தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கோபத்தை விட்டுவிடுங்கள்

தகுந்த காரணத்தினால் உண்டான கோபமாக இருந்தாலும் அல்லது காரணமில்லாமல் ஏற்படும் கோபமாக இருந்தாலும், கோபம் இருதய த்திலே குடி கொள்ள இடங் கொடுக்கக் கூடாது. கோபத்தை விட்டு விடாமல் பற்றிக் கொள்ளும் போது, பிசாசுக்கு இடங்கொடு க்கின்ற வர்களாக இருப்போம். அப்படி செய்யும் போது எங்கள் பேச்சுக்களி னாலும், செயல்களினாலும், சிந்தனை களினாலும் பல பாவங்களை செய்து விடுவோம். கோபத்தை எப்படி விட்டு விடுவது? எந்த பாவ சுபாவங்களையும் எமது சொந்த பெலத்தால் மேற்கொ ள்ள முடியாது. எங்கள் போராயுதங் கள் அரண்களை தகர்தெறியும்படி தேவன் தரும் பெலனாக இருக்கின்றது. இந்த பெலனானது இயேசு வின் நாமத்திலே, தூய ஆவியானவர் வழியாக எங்களுக்கு கொடுக்க ப்படுகின்றது. ஆகவே, நீங்கள் பரிசுத்த வேதாகமத்தை வாசிக்க ஆர ம்பிக்க வேண்டும். பொதுவாக, தேவனை அறிந்த மனிதர்களும் தங்கள் மாம்சகிரியைகளிலிருந்து விடுபடமுடியாமல் இருப்பதற்குரிய முதல் காரணியாக பெருமை இருக்கின்றது. பெருமை எங்களில் குடி கொண்டிருக்கும் போது, நாங்கள் எங்கள் குற்றங்களை ஏற்றுக் கொள் ளவும் மாட்டோம். எங்களை தாழ்த்த இடங் கொடுக்கவும் மாட்டோம். பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கின்றார். எனவே, எங் கள் குற்றங்களை ஒத்துக் கொண்டு மன்னிப்பு கேட்க ஆரம்பிக்க வேண் டும். அதே நேரத்தில் மற்றவர்களை மன்னிக்க ஆரம்பிக்க வேண்டும். மன்னிப்பு இல்லாத இடத்தில், கோபம் ஆற்றப்பட மாட்டாது. கசப் பான வேர் இருதயத்தை முற்றாக கெடுத்துவிடும். எனவே, தேவனு டைய பாதத்திலே அமர்ந்திருந்து, தேவ வார்த்தையை அறிக்கையி ட்டு, உங்களை துன்பப்படுத்துகின்றவர்களை மன்னித்து ஆசீர்வதிக்க வேண்டும். எனவே, வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கைக்கு ஜெபம் அவசியம். ஆகவே, கோபத்தை வெற்றி கொள்ள முதலாவதாக மன் னிக்க ஆரம்பியுங்கள். ஒவ்வொரு தடவையும் நாங்கள் தவறும் போது, தேவன் எங்கள் மேல் கோபம் கொண்டு எங்கள் மேல் நீதி செய்தால், ஒருவரும் பரலோகம் செல்ல முடியாது. தேவனுடைய பிள் ளைகளாகிய நாங்கள் அவரைப்போல மற்றவர்களை மன்னிக்க ஆர ம்பிக்கும் போது, நாளடைவில், கோபமானது எங்களில் செயலற்றுப் போய்விடும்.

**எபேசியர் 4:26**

**சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது**

**ஜெபம்**: கிருபை நிறைந்த தேவனே, பழிக்கு பழி வேண்டுவேன் என்று வாழாமல், உம்மிடமிருக்கும் மன்னிக்கும் மனப்பான்மை என்னில் பெருகும்படிக்காய் எனக்கு கிருபை செய்யும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மறந்து விட பழகிக் கொள்ளுங்கள்

யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள் பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே. ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்துபோகாதபடிக்கும் யாதொரு கசப்பான வேர் முளைத்தெழும்பிக் கலகமுண்டாக்குகிறதினால் அநேகர் தீட்டுப்படாதபடிக்கும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் என பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. "**மன்னித்துவிட்டேன் ஆனால் அவன் செய்த துரோகத்தை மறக்க மாட்டேன்**" என சில மனிதர்கள் கூறுவதுண்டு. அது தங்கள் வாழ்க்கையின் கொள்கை என்று அதை நியாயப்படுத்திக் கொள்வார்கள். இது மன்னிப்பு அல்லவே. தன்னுடைய தகப்பனுக்கு துரோகம் செய்து தன் ஆஸ்தியின் பங்கை எடுத்துச் சென்ற இளைய மகன், தன் தகப்பனுக்கு அவமானத்தை உண்டு பண்ணினான். பின்பு பாவ வழிகளிலே தன் ஆஸ்தியை எல்லாம் செலவழித்து, மிகவும் தாழ்ச்சியடைந்த நிலையிலே தகப்பன் வீட்டிற்கு திரும்பினான். ஒரு வேளை தகப்பன் தன்னை அவருடைய ஊழியர்களில் ஒருவனாக ஏற்றுக் கொள்வார் என்று நினைத்திருந்தான். ஆனால், அவன் வீடு திரும்பிய போது, தகப்பன் ஓடிச் சென்று அவனை கட்டியணைத்து, பெரும் விருந்தை உண்டு பண்ணினார். அவன் செய்த பாவங்களை நோக்கிப் பார்க்கவில்லை. அதைப் பற்றி ஏதும் பேசவும் இல்லை. அதே போல நாங்களும் மன்னிக்கும் போது, அந்த விடயம் இனி எங்கள் இருதயத்தில் எண்ணப்படுவதில்லை என்ற முடிவை எடுக்க வேண்டும். பழைய கசப்பின் நினைவுகள் வரும் போது, இயேசுவின் நாமத்தில் அதை கடிந்து கொண்டு. அந்த நபரை ஆசீர்வதிக்க வேண்டும். இப்படியாக நாங்கள் செய்து வரும் போது, எங்களுக்கு எதிராக குற்றம் செய்தவர்களை குறித்த கசப்பான எண்ணம் பெலனற்றுப் போய்விடும். பெரிதான மகிழ்ச்சி உள்ளத்திலே பொங்கும். பாத்திரத்தையே உருக்கிப்போடும் இரசாயன திரவம் போல, எங்கள் இருதயத்தில் குடி கொள்ளும் சிறிய கசப்பு, எங்கள் சமாதானத்தை குலைத்துவிடுவதால், எங்கள் ஆத்துமாவை கெடுத்து விடும். சரீரத்திலே வியாதிகளையும் உண்டாக்கும். எனவே, மன்னித்துவிட்டேன் ஆனால் மறக்க மாட்டேன் என்ற கசப்பு நிறைந்த எண்ணத்தை விட்டு விட்டு, தேவன் எங்களுக்குத் தயவாய் தந்த மன்னிப்பை மற்றவர்களுக்கு தாராளமாய் வழங்குவோம்.

**லேவி 19:17**

உன் சகோதரனை உன் உள்ளத்தில் பகையாயாக;

**ஜெபம்:** இரக்கமுள்ள தேவனே, நீர் என் பாவங்களை மன்னித்து, அவைகளை நினையாதிருப்பது போல நானும் மற்றவர்களை உண்மை மனதுடன் மன்னிக்க எனக்கு கற்றுத் தருவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பிரயாசப்படுகின்றவர்கள்

ஆதிச் திருச்சபையின் நாட்களிலே, கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் நிமித்தம் அநேகர் காவலிலே (சிறையிலே) வைக்கப்பட்டார்கள். அவர்களைக் குறித்து கரிசனையுள்ளவர்களாக இருக்கும்படியாக இங்கே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இன்றைய நாட்களில், பல நாடுகளிலே சுவிசேஷத்திற்கு திறந்த வாசல் உண்டு. குறிப்பிட்ட சில நாடுகளிலே, இன்றும் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்காக, பலர் பாடுகளையும், கட்டுக்களையும் அனுபவித்து வருகின்றார்கள். சிறைச்சாலையில் போடப்படாவிடினும், அதற்கொத்த பிரகாரமாய் பல மட்டங்களில் இன்று வெவ்வேறு ஐக்கியத்திலுள்ள தேவ ஊழியர்களும், விசுவாசிகளும் நெருக்கப்பட்டு வருகின்றார்கள். அவர்களோடு நாங்கள் யாவரும் கிறிஸ்துவில் ஒரே சரீரமாக இருக்கின்றோம். எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம் ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது. ஆதலால் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும் ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும். “சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்று இயேசு கூறியிருக்கின்றார். எங்களுக்கு இந்த பூவுலகிலே இலாபம் உண்டாகும்படி அல்ல, பரலோகத்திலே இருக்கின்ற எங்கள் பிதாவின் சித்தம் இந்த பூமியிலே நிறைவேறும்படியாய் நாங்களும் பங்காளிகளாக அழைக்கப்பட்டிருக்கின்றோம். எனவே, உதவி செய்ய சந்தர்ப்பம் ஏற்படும் போது, நான் இன்ன குழுவைச் சேர்ந்தவன், நீ அந்த குழுவை சேர்ந்தவன் என்று பாகுபாடில்லாமல், உங்கள் அன்பை கூட்டி வழங்குங்கள். அவர்களை உற்சாகப்படுத்துங்கள். உங்களால் இயன்ற அளவிற்கு பொருள் உதவியை வழங்குங்கள். சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள்.

**எபிரெயர் 13:3**

**கட்டப்பட்டிருக்கிறவர்களோடே நீங்களும் கட்டப்பட்டவர்கள்போல அவர்களை நினைத்துக்கொள்ளுங்கள் நீங்களும் சரீரத்தோடிருக்கிறவர்களென்று அறிந்து, தீங்கநுபவிக்கிறவர்களை நினைத்துக்கொள்ளுங்கள்.**

**ஜெபம்:** இரக்கமுள்ள பிதாவே, உம்முடைய திருப்பணியின் நிமித்தம் பிரயாசப்பட்டு, பாடனுபவிக்கின்றவர்களுக்கு ஆதரவாக இருக்கும்படிக்கான உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இரட்சிப்பின் மேன்மை

பரலோகராஜ்யம் தன் குமாரனுக்குக் கலியாணஞ்செய்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது என்று இயேசு ஒரு உவமையைக் கூறினார். அழைக்கப்பட்டவர்களைக் கலியாணத்திற்கு வரச்சொல்லும்படி அவன் தன் ஊழியக்காரரை அனுப்பினான் அவர்களோ வர மனதில்லாதிருந்தார்கள். அதாவது அழைக்கப்பட்டவர்களோ அந்த பெரிதான அழைப்பை அசட்டை பண்ணி, ஒருவன் தன் வயலுக்கும், ஒருவன் தன் வியாபாரத்துக்கும் போய்விட்டார்கள். மற்றவர்கள் அவன் ஊழியக்காரரைப் பிடித்து, அவமானப்படுத்தி, கொலை செய்தார்கள். சற்று இந்த சம்பவத்தை சிந்தித்து பாருங்கள்! ஒரு தேசத்தின் ராஜாவின் ஆதரவினால் எங்களுக்கு கிடைக்கக்கூடிய நன்மைகள் பெரிதானவைகள். எங்களுடைய பிரச்சனைகள் எங்களிடம் இருக்கும் வயலும் (சொத்துகளும்), வியாபாரமும் (பொருளாதாரமும்) என்றால், அந்த பிரச்சனைகளை தீர்த்துவைக்கவும், நாங்கள் நினைப்பதிலும் அதிகதிமாக செய்வதற்கும் ராஜாவிற்கு அதிகாரம் உண்டு. இந்த சம்பவத்திலே தேவனானவர், தம்முடைய ஜனங்கள் என்று தெரிந்தெடுத்த இஸ்ரவேலரை, பரலோக ராஜ்யத்திற்கு வரும்படி அழைப்பைக் கொடுத்தார். இந்த அழைப்பு மேன்மையானது, அழியாதது, மாசற்றது. ஆனால் அவர்களோ, உணர்வில்லாதவர்களைப் போல செயற்பட்டார்கள். முடிவு என்ன? அவர்களின் அழிவு! பின்பு, இயேசுகிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்த எங்களை அழைத்தார். இயேசுவின் விலைமதிக்க முடியாத இரத்தத்தினால், எங்கள் பாவங்களை கழுவி, எங்கள் அவமானத்தை நீக்கி, இரட்சித்து, இரட்சிப்பின் வஸ்திரத்தை தந்தார். இந்த விலைமதிக்க முடியாத இரட்சிப்பைக் குறித்து நாங்கள் அசட்டையாக இருந்து, மேன்மையான அந்தத் தகுதியை நாங்களும் இழந்து போவோமாக இருந்தால், நாங்களும் பரிதவிக்கப்படத்தக்கவர்களாக மாறிவிடுவோம். எனவே, இந்தப் பூவுலகின் செல்வங்களுக்காகவோ, அழிந்து போகின்ற காரியத்திற்காகவோ தேவன் தந்த இந்த மகத்தான இரட்சிப்பை இழந்து போகாமல் காத்துக் கொள்வோம்.

**மத்தேயு 22:14**

அந்தப்படியே, அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களோ சிலர் என்றார்.

**ஜெபம்:** அன்பின் பிதாவே, நீர் எனக்கு தந்த இரட்சிப்பின் மேன்மையை நான் நன்கு உணர்ந்தவனா(ளா)ய், அதை காத்துக் கொள்ளத்தக்கதாக உம்முடைய திருச்சித்தத்தை என் வாழ்வில் நிறைவேற்ற கிருபை செய்யும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பரிசுத்தப்படுத்தும் தேவன்

உன் தேவனாகிய கர்த்தர் உன்னைச் சிறுமைப்படுத்தும்படிக்கும், தம்முடைய கட்டளைகளை நீ கைக்கொள்வாயோ கைக்கொள்ளமாட்டாயோ என்று அவர் உன்னைச் சோதித்து, உன் இருதயத்திலுள்ளதை நீ அறியும்படிக்கும், உன்னை இந்த நாற்பது வருஷமளவும் வனாந்தரத்திலே நடத்திவந்த எல்லா வழியையும் நினைப்பாயாக என்று தம்முடைய ஜனங்களுக்கு தேவனாகிய கர்த்தர் தன்னுடைய தாசனாகிய மோசே வழியாக உரைத்து கூறினார். மனிதர்கள் உள்ளத்தில் என்ன இருக்குமென்பதை தேவன் அறிந்திருக்கின்றார். ஆனால் தேவனுடைய பிள்ளைகளாக அழைக்கப்பட்டவர்கள், தங்கள் இருதயத்தில் இருக்கும் தங்கள் வழிகளை உணராதிருக்கின்ற வேளைகளிலே, அவர்கள் தங்களைக் குறித்த மற்றவர்களின் ஆலோசனைகளை பொருட்படுத்துவதில்லை. எங்களை நேசி க்கின்ற எங்கள் நல்ல தந்தையாகிய தேவன் தாமே, நாங்கள் யார் என்றும் எங்கள் உள்ளத்திலே இருப்பது என்னவென்றும் நாங்கள் உணர்ந்து அவரிடம் திரும்பும்படிக்கும் சில சோதனைகளை அனுமதிக்கின்றார். தகப்பனானவன் தன் புத்திரனைச் சிட்சிக்கிறதுபோல எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களைச் சிட்சிக்கிறார் என்று நாங்கள் எங்கள் இருதயத்தில் அறிந்துகொள்ள வேண்டும். இந்த உலகத்திலுள்ள நல்ல தகப்பன்மார் தங்கள் பிள்ளைகளை கண்டித்து தண்டித்து சீர்திருத்தும் போது, தங்கள் பிள்ளைகள் நிலை தவறாதபடிக்கு காத்துக் கொள்ளுவதை விட, மிக அதிக திகமாக தம்முடையவர்களை தேவன் நேசிக்கின்றார். தேவன் சோதிக்கும் போது, ஒருபோதும் எங்கள் பெலனுக்கு மிஞ்சின சோதனையை அனுமதிக்க மாட்டார். தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும்பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார். அப்படியான சோதனையின் வேளையிலே நாங்கள் தேவனுக்கு கீழ்ப்படிவோமாக இருந்தால், நாங்கள் தேவனுக்குள் பெலனடைந்து, நீதியாகிய சமாதான பலனைக் கண்டடை வோம்.

**1 கொரிந்தியர் 10:13**

உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும் படியான போக்கையும் உண்டாக்குவார்.

**ஜெபம்**: என் தேவனாகிய கர்த்தாவே, வேதனை உண்டாக்கும் வழிகள் என் உள்ளத்தில் இருந்தால், அதை எனக்கு தெரியப்படுத்தி, அதை விட்டுவிடத்தக்கதாக என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவ சத்தத்தை கேட்போம்

சோதனைக் காரனாகிய பிசாசானவன் ஆதிமுதல் வஞ்சிக்கின்றவனாக இருக்கின்றான். திருடனாகிய அவன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். ஆனால் எங்கள் நல்ல மேய்ப்பனாகிய இயேசுவின் சத்தத்தை நாங்கள் எப்போதும் கேட்டு, அதற்கு செவி கொடுக்கின்றவர்களாக இருந்தால், நாங்கள் அவனுடைய வஞ்சகத்தில் ஒரு போதும் விழுந்து போகமாட்டோம். மேய்ப்பனாகிய இயேசுவை பின்பற்றும் நல்ல ஆடுகளாகிய அவருடைய பிள்ளைகள், பிசாசானவனின் சத்தத்தை அறியாதபடியினால், அந்த சத்தத்தை கேட்டவுடனே, அந்த ஆடுகள் அந்நியனாகிய பிசாசுக்கு பின்செல்லாமல், அவனை விட்டோடிப்போம் என்றார். ஆனால், நல்ல மேய்ப்பனாகிய இயேசுவின் சத்தத்திற்கு கீழ்ப்படியாமல், அந்நிய சத்தத்தைக் கேட்க எங்கள் மனதை சாய்ப்போமாக இருந்தால், பிசாசின் வஞ்சகமான வார்த்தைகளினால் இழுப்புண்டு போய்விடுவோம். கர்த்தர் ஒரு காரியத்தை செய்யாதே அல்லது தொடாதே, அல்லது பார்க்காதே அல்லது கேட்காதே என்று கூறியிருந்தால். அதற்கு பின் அங்கே வேறு பேச்சுக்கு இடம் இருக்கக் கூடாது. ஆதியிலே ஏவாள் வஞ்சகனின் சத்தத்தைக் கேட்டு, அவனைவிட்டு ஓடிப்போகாமல், அவனோடு பேச ஆரம்பித்ததால் அவள் வஞ்சிக்கப்பட்டாள். ஆகவே, எங்களுக்கு வரும் எல்லா சோதனைகளும் தேவனிடத்திலிருந்து வருவதில்லை. சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக. தேவன் **பொல்லாங்கினால்** சோதிக்கப்படுகிறவரல்ல, **பொல்லாங்கினால்** ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல. அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும் என வேதம் கூறுகின்றது. எனவே, சோதனைக்குட்படாதபடி விழித்திருந்து ஜெபம் செய்யுங்கள். அந்நிய சத்தத்தை ஒரு முறை கேட்டுப் பார்ப்பேன், என்று சமரசம் செய்து, கர்த்தருடைய ஆலோசனையைத் தள்ளி, அவரைவிட்டு விலகிப் போய்விடாதிருங்கள்.

**யோவான் 10:5**

அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினால் அவைகள் அந்நியனுக்குப் பின்செல்லாமல், அவனை விட்டோடிப்போம் என்றார்.

**ஜெபம்**: அன்பின் பரலோக தந்தையே, நான் எப்போதும் உம்முடைய சத்தத்திற்கு செவி கொடுத்து, உம்முடைய தூய வழியிலே நான் வாழும்படிக்கு என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நன்மையான ஈவுகள்

கர்த்தராகிய இயேசு, தம்முடைய சீஷனாகிய சீமோன் பேதுருவை நோக்கி: சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்: நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார். அந்த பிரகாரமாய், சீமோன் பேதுரு பெரிதான சோதனைக்குள் உட்படுத்தப்பட்டான், கர்த்தர் அவன் அழிந்து போகாமல் காத்துக் கொண்டார். இதே போல, யோபு என்னும் பக்தனின் வாழ்விலும் சாத்தானானவன், அவனை சோதிக்கும்படியாய் உத்தரவு பெற்றுக் கொண்டான். எனினும் அவனையும் கர்த்தர் காத்துக் கொண்டார். எங்களுடைய வாழ்க்கையிலும் இப்படிப்பட்ட சம்பவங்கள் அனுமதிக்கப்பட்டால், கர்த்தர் எங்களோடு இருந்து எங்களை காத்து வழிநடத்துவார். சீமோன் பேதுரு, யோபு என்னும் பக்தர்களின் இருதயத்திலே, சோதனை வேளைகளிலும் பாவம் செய்யும் இச்சை இருக்கவில்லை. ஆனால் சில மனிதர்கள், கர்த்தரை அறிந்திருந்தும் பாவம் செய்வதற்கு சந்தர்ப்பம் தேடித் திரிகின்றார்கள். எப்படியெனில், ஒரு இக்கட்டான சூழ்நிலை எங்கள் வாழ்விலோ அல்லது நாங்கள் நேசிப்பவர்களின் வாழ்விலோ ஏற்படும் போது, பொறுமையாக கர்த்தருடைய பாதத்திலே அமர்ந்திருப்பதற்கு பதிலாக, கர்த்தரை நம்பி இருந்தேனே, இப்படி நடந்து விட்டதே என்று கூறி, இனி என்ன செய்வது? என்று தாங்கள் விட்டு வந்த பழைய பாவ இச்சைகளுக்கு திரும்பி விடுகின்றார்கள். இது கர்த்தரால் உண்டாவதில்லை. கர்த்தர் பாவத்தின் காரணர் அல்ல. அவர் பரிசுத்தர்! கர்த்தர் மனக் குழப்பத்தை ஏற்படுத்துகின்றவர் அல்ல. அவர் சமாதான காரணர். கர்த்தரிடத்தில் தீமை இல்லை! நன்மையான ஈவுகளும், பூரணமான வரங்களும், பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது. எப்படியான சோதனை வேளையிலும், கர்த்தருடைய பாதத்திலே ஜெபத்திலே தரித்திருந்து ஜெயம் பெறுவோம்.

**யாக்கோபு 1:17**

நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது.

**ஜெபம்**: ஜெயம் தரும் தேவனே, சோதனை வேளைகளிலே, எங்கள் கர்த்தராகிய இயேசுவைப் போல, அவைகளுக்கு இடங்கொடாமல், ஜீவனுள்ள வார்த்தை வழியாக ஜெபிக்க கிருபை செய்யும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# விசுவாசத்தின் பரீட்சை

மனிதர்கள் எதிர்பார்த்திருந்த காரியம், அவர்களுடைய மனவிருப்பத்தின்படி நிறைவேறாமல் போகுமிடத்து விரக்தியடைந்து விடுகின்றார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலைகளை பலரும் பலவிதமாக கையாளுகின்றார்கள். பல வழிகளிலே தங்கள் அதிருப்தியை வெளிக்காட்டுகின்றார்கள். நாங்கள் நினைத்த காரியம் வாய்க்காமல் போகும் போது, நாங்களும் மனவேதனையடைகின்றோம். அந்த வேளைகளிலே நாங்கள் எங்கள் விசுவாசத்திற்கு எதிரான வார்த்தைகளை அறிக்கையிடக்கூடாது. சிலர் தங்கள், இக்கட்டான சூழ்நிலைகளிலே, விரக்தியை வெளிக்காட்டும்படிக்கு, வேத வார்த்தைகளுக்கு முரணான காரியங்களையும், வேண்டாம் என்று தள்ளிவிட்ட பழைய வாழ்க்கையின் காரியங்களையும் செய்துவிடுகின்றார்கள். அந்த காரியங்கள், ஆரம்பத்திலே சின்ன விஷயமாக தோன்றலாம், ஆனால் அப்படியான வழிமுறைகளுக்கு எங்களை நாங்கள் பழக்கிக்கொள்ளும் போது, '**நான் என்னும் பெருமை**' எங்களுக்குள் தலைதூக்கிவிடும். நான் சொல்லும்படி அல்லது நினைத்தபடி காரியங்கள் நடைபெற வேண்டும் என்னும் அகங்காரம் எங்களில் வளர ஆரம்பிக்கும். எல்லாவற்றையும் விட சுயகௌரவமே முக்கியமானது என்ற நிலைக்கு தள்ளப்பட்டுவிடுவோம். இப்படியாக, இயேசுவோடு இருந்த யூதாஸ் காரியோத்தும், தாவீதின் ஆலோசனைக்காரனாகிய அகித்தோப்பேலும், தாங்கள் நினைத்தபடி காரியங்கள் கைகூடாமல் போன போது, அதை தாங்கிக் கொள்ளமுடியாமல் தற்கொலை செய்து கொண்டார்கள். இப்படிப்பட்ட முடிவுகளை மனிதர்கள் ஒரு நாளில் எடுப்பதில்லை. பல ஆண்டுகளாக, இவர்களாகவே வளர்த்து வந்த பாவ இச்சைகள் இவர்க ளுக்கு கண்ணியாக மாறியது. எங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்கும்படி தேவனில் சார்ந்திருக்க வேண்டும். 'இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.' எனவே பொறுமையோடு ஜெபத்திலே தரித்திருந்து தேவனுடைய வாக்குத்தத்தங்களை அறிக்கையிடுங்கள்.

**யாக்கோபு 1:3**

**உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்.**

**ஜெபம்**: நீடியபொறுமையுள்ள தேவனே, உம்முடைய திவ்விய சுபாவத்திற்கு பங்காளியாக நான் மாறும் பொருட்டு, பொறுமையுடன் உம்முடைய சித்தம் நிறைவேற காத்திருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சஞ்சலத்தை அகற்றிவிடு

மற்றய வாலிபர்கள் எல்லாம் எப்படியாக உல்லாசமாக வாழ்கின்றார்கள். நான் இன்னும் சில ஆண்டுகளுக்கு பின் இரட்சிப்படைந்திருந்தால், இன்னென்ன காரியங்களை அனுபவித்திருப்பேன் என்று ஒரு வாலிபன் தன் உள்ளத்திலே சொல்லிக் கொண்டான். இப்படியான எண்ணங்கள் வாலிபர்களிடம் மாத்திரமல்ல, சில வேளைகளிலே, யாவருடைய மனதிலும் தோன்றலாம். இப்படிப்பட்ட சிந்தனைகள் தேவனை அறிகின்ற அறிவுக்கு விரோதமானவைகள். நாங்கள் சுய இச்சைகளில் சிக்குண்டு போனால், அந்த இச்சையானது குறித்த சந்தர்ப்பத்திலே எங்களை பாவம் செய்ய தூண்டும், பின்பு நாங்கள் அந்த பாவத்திற்கு அடிமைகளாக மாறிவிடுவோம். எனவே இப்படிப்பட்ட எண்ணங்கள் எங்களில் தோன்றும் போது, அவைகளை எங்கள் இருதயத்திலே தக்க வைத்து, அவைகளை குறித்த சிந்தனைகளை வளர்க்காமல், உடனடியாகவே எங்கள் இருதயத்திலிருந்து இவ்வகையான எண்ணங்களையும், எங்கள் மாம்சத்திலிருந்து தீங்கையும் நீக்கிப்போட வேண்டும். நாங்கள் அழிந்து போகின்ற இந்த கூடாரமாகிய சரீரத்திலே வாழ்ந்து வந்தாலும், அழிவுக்குரியவைகளை நாடித் தேடுகின்றவர்கள் அல்ல. நாங்கள் அழியாமையை தரித்துக் கொள்ளும்படிக்கு, அழிவில்லாத தேவனுடைய ராஜ்யத்திற்குரிய நித்தியமானவைகளை நாடித் தேடுகின்றோம். அழிவில்லாத தேவனுடைய வார்த்தைகள் வழியாக, அழிவுக்குரிய பாவ இச்சைகளை எதிர்த்து போராடுகின்றோம். எங்கள் போராயுதங்கள் இந்த உலக போக்கிற்குரியதல்ல. எங்கள் போராயுதங்கள், அந்தகார கிரியைகளை அழித்துப் போடுகின்ற, தேவனுடைய பெலனாக இருக்கின்றது. அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம். இந்த உலகம் தரும் இன்பங்கள் தற்காலிகமும் மாயையுமானது. அவைகளினால் எங்கள் இருதயத்தை சஞ்சலப்படுத்தாமல், தெய்வீக சுபாவங்களை நாடித் தேடுவோம்.

**பிரசங்கி 11:10**

நீ உன் இருதயத்திலிருந்து சஞ்சலத்தையும், உன் மாம்சத்திலிருந்து தீங்கையும் நீக்கிப்போடு இளவயதும் வாலிபமும் மாயையே.

**ஜெபம்**: கிருபையுள்ள தேவனே, இந்த உலகத்தின் ஆசைகள் தங்கும் இடமாக என் இருதயத்தை வைத்திருக்காமல், பரலோகத்தின் ஆசைகளினால் நிறையும்படி என்னை வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இடறிப்போவதில்லை

சரீரத்தின் ஒரு அவயவமானவது அதன் தொழிற்பாட்டை இழந்து போகும் போது அல்லது அது உருவாக்கப்பட்ட நோக்கத்தை நிறை வேற்றாதவிடத்து, அங்கே நிறைவு காணப்படமாட்டாது. தனிப்பட அந்த அவயவத்திலும், அந்த அவயவம் இணைக்கப்பட்ட சரீரத்தின் இயக்கத்திலும் குறைவு காணப்படும். நாங்கள் ஒவ்வொருவரும் சபை யாகிய கிறிஸ்துவின் சரீரத்தில் அவயவங்களாக இருக்கின்றோம். எங்கள் ஒவ்வொருவருக்கும் தனிப்பட ஒரு சிறப்பை கர்த்தர் கொடுத்திருக்கின்றார். நாங்கள் நியமிக்கப்பட்ட அந்த நோக்கத்தை நிறைவேற்றாமல், வேறு எந்த கிரியையை நடப்பித்தாலும், எங்கள் வாழ்க்கையில் நிறைவு காணப்படமாட்டாது. நாங்கள் ஒவ்வொருவரும், ஒரு சபையிலும், ஒரு குடும்பத்திலும் இணைக்கப்பட்டிருக்கின்றோம். நாங்கள் ஒவ்வொருவரும் ஒரு கல்வி நிலையத்தில் அல்லது ஒரு வேலை ஸ்தலத்தில் இணைக்கப்பட்டிருக்கின்றோம். நாங்கள் தனிப்பட எங்கள் தொழிற்பாட்டை இழந்து போகும்போது நாங்கள் இணைக்கப்பட்டிருக்கும் எல்லா கூட்டுறவிலும் குறைவு காணப்படும். ஒரு குடும்பத்திலே ஒருவருக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பை அல்லது அந்த அங்கத்தவர் செய்ய வேண்டிய காரியத்தை செய்யாதவிடத்து, குடும்பத்திலே சமாதானம் குறைய ஆரம்பிக்கும், அப்படியாகவே அந்த குறைவு நாங்கள் செல்லும் சபை ஐக்கியத்திலும், எங்கள் வேலை இடத்திலும் பிரதிபலிக்கும். உப்பானது சாரமேற்றப்பட்டிருப்பது போல, எங்கள் அழைப்பை நிறைவேற்றும்படி தேவ பெலனை பெற்றிருக்கின்றோம். எங்களுக்கு கொடுக்கப்பட்ட அந்த தேவ பெலனின் நோக்கத்தை மறந்து, நாங்கள் வேறு எந்த கிரியைகளை நடப்பித்தாலும் தேவன் அனுக்கிரகம் செய்திருக்கும் மெய் சமாதானத்தை நாங்கள் அனுபவிக்க முடியாது. சரீரத்தின் அவயவங்கள் ஒவ்வொன்றிற்கும் சரியாக பொருந்தும் ஸ்தானங்கள் உண்டு. அதே போல நாங்கள் நிற்க வேண்டிய இடமும் செய்ய வேண்டிய காரியமும் உண்டு. அதை செய்யும் போது நாங்கள் நிறைவான சமாதானத்தை அடைந்து கொள்வோம்.

**2 பேதுரு 1:10**

ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள் இவைகளை செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை.

**ஜெபம்:** என்னை அழைத்த தேவனே, என்ன நோக்கத்திற்காக என்னை அழைத்தீரோ அந்த நோக்கத்தை நான் நிறைவேற்றும்படிக்கு என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

சனி | ஆடி 13

📖 மாலை வாசகம் – யோவான் 15:6 – 8

# என் சாயல் என்ன?

நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும் என்று இயேசு கூறியிருக்கின்றார். வார்த்தையில் நிலைத்திருப்பது என்பது, வேத வார்த்தைகளை கேட்டு கற்று கொள்வது மாத்திரமல்ல, கேட்ட வார்த்தைகளின்படி நாங்கள் எங்கள் நாளாந்த வாழ்க்கையை நடத்துகின்றவர்களாக இருக்க வேண்டும். தேவனுடைய பிள்ளைகளாக அழைப்பை பெற்ற நாங்கள், சந்தர்ப்ப சூழ்நிலைகளிலே நாங்கள் யார் என்பதை மறந்து போய்விடுகின்றோம். எங்கள் சுயரூபத்தை நாங்கள் கண்ணாடியில் பார்க்கின்றோம். அதுபோல எங்கள் உள்ளான மனிதனுடைய ஆவிக்குரிய நிலையை பார்க்கும் கண்ணாடியாக வேத வார்த்தைகள் இருக்கின்றது. அந்த ஜீவனுள்ள வார்த்தைகள் நாங்கள் யார் என்பதையும், எங்கள் அழைப்பையும், நாங்கள் சென்றடைய வேண்டிய இடத்தையும், அதற்காக நாங்கள் எப்படி வாழ வேண்டும் என்பதையும் எங்களுக்கு உணர்த்தி வெளிப்படுத்துகின்றது. நாங்கள் அந்த ஜீவனுள்ள வார்த்தைகளை கேட்டுவிட்டு, அதன்படி வாழாமல் இருப்போம் என்றால், சந்தர்ப்ப சூழ்நிலைகளால் இழுப்புண்டுபோய் விடுவோம். இந்த உலக போக்குகளின்படி வாழ்பவர்களாக மாறிவிடுவோம். இந்த உலக போக்குகள் நாங்கள் விட்டுவந்த பழைய வாழ்க்கையின் பாவ சுபாவங்கள். அந்த போக்குகளின்படி நாங்கள் வாழும் போது, எங்கள் ஆவிக்குரிய நிலையை நாங்கள் மறந்து போய்விடுகின்றோம். அங்கே எங்கள் மாம்சத்தின் சுய இச்சைகளை வெளிப்படுத்தும் பழைய மனுஷனையே காண்கின்றோம். கேட்டவைகளை மறந்து போகின்றவன், திருவசனத்தைக் கேட்டும் அதின்படி செய்யாதவன், வார்த்தையின் வெளிச்சத்தில் தன்னைத் தானே பார்த்து, அவ்விடம் விட்டுப் போனவுடனே, தன்னுடைய தேவ சாயலின் அழைப்பு இன்னதென்பதை மறந்துவிடுகின்றான். அதனாலே தன்னையே தான் வஞ்சித்து விடுகின்றான். நாங்கள் அப்படி இருக்கலாகாது. வேத வார்த்தையின் வெளிச்சத்தில் வாழும்படியாக எங்களை அர்ப்பணிக்கும் போது நாங்கள் யார் என்பதை ஒரு போதும் மறந்து போக மாட்டோம்.

**யாக்கோபு 1:22**

அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்.

**ஜெபம்:** ஜீவனுள்ள பரலோக தந்தையே, நாங்கள் யார் என்பதை உணர்ந்து, உம்முடைய ஜீவ வார்த்தையின் வெளிச்சத்திலே வாழும்படிக்காய் எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களைத் தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பக்திவிருத்திக்கு ஏதுவானவைகள்

> **யாக்கோபு 1:26**
> **உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னை தேவபக்தியுள்ள வனென்று எண்ணினால் அவனுடைய தேவபக்தி வீணாயிருக்கும்.**

தேவனுடைய வார்த்தை எங்களில் நிலைகொள்ளாமல் போகும் ஒரு சில சந்தர்ப்பங்களை ஆராய்ந்து பார்த்து, அவைகள் எங்களிடம் இரு க்குமாயின் அவைகளை எங்களை விட்டு அகற்றிவிட வேண்டும். போர்க்களத்தில் நிற்கும் ஒரு யுத்தவீரன் தான் நிற்கும் இடம் இன்ன தென்பதையும், தான் யார் என்பதையும் மறந்து போவானானால் அவ னுடைய நிலை என்னவாகும்? நாங் கள் பக்திவிருத்தியடையும்படிக்காய், சபைகூடி வருகின்றோம். அங்கே ஒன் றாய் கூடி ஒருமனதுடன் தேவனை ஆராதிக்கவும், தேவ வார்த்தைகளில் நிலை கொள்ளும்படி தேவ செய் தியை கேட்கவும், ஒருவரை ஒருவர் தாங்கி, ஞான நன்மைகளை பகிர்ந்து கொள்ளும்படியாகவும் நாங்கள் ஆல யத்திற்கு செல்கின்றோம். நாங்கள் யாவரும் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகர்களாய் நியமிக்கப்பட்டிரு க்கின்றோம். வான மண்டலத்திலுள்ள பொல்லாத ஆவிகளோடு எங்களு க்கு போராட்டம் உண்டு. எங்கள் போராயுதங்கள் எங்கள் மாம்சத்தில் தோன்றும் தீய உணர்வுகள் அல்ல. நாங்கள் தீமையை தீமையால் ஜெயிக்கின்றவர்கள் அல்லர். நாங்கள் தீமையை தேவ நன்மையால் ஜெயிக்கின்றவர்கள். எனவே, நாங்கள் குறைவு களை கண்டு அவை களை குறித்து சம்பாஷித்து, அவைகளை மேன்மைப் படுத்தி, முறு முறுக்கும் வீரர்கள் அல்ல. நாங்கள் குறைகளை காணும்போது, விழிப்புள்ளவர்களாய் எங்கள் கர்த்தரை நோக்கி ஊக்கத்தோடு விண் ணப்பம்பண்ணி, குறைவுகளை கிறிஸ்து இயேசுவுக் குள் நிறைவாக்கு கின்றவர்களாக இருக்க வேண்டும். நாங்கள் தேவனைத் துதிக்கும் வெற்றி வீரர்கள். மனிதர்களுடைய ஆத்துமா பாதாளத்தில் அழிந்து போகாமல் காக்கும்படி தேவ நற்செய்தியை அறிவிக்கும் நாவை உடையவர்கள். தேவ துதியைச் சொல்லி, நித்திய வாழ்வை கொடு க்கும் தேவ நற்செய்தியை அறிவிக்கும் நாவாலே நாங்கள் நிறைவா னவைகளை, ஆசீர்வாதமானவைகளை, கிருபை நிறைந்த வார்த் தைகளையே பேச வேண்டும். எனவே எங்களை நாங்களே வஞ்சிக் காமல், பக்திவிருத்திக்கு ஏதுவான வார்த்தைகளைப் பேசுவோம். தேவன் தாமே பெலன் தந்து நம்மை நடத்துவாராக.

> **ஜெபம்**: சர்வ வல்லமையுள்ள தேவனே, குறைவுகளை நீர் இயேசு கிறிஸ்துவுக்குள்ளாய் நிறைவாக்கி நடத்துவீர் என்ற விசுவாசம் என்னில் கிரியையை நடப்பிக்கும்படியாய் வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# விலையேறப் பெற்றவர்கள்

இந்த உலகிலே மனிதர்கள் பல தரப்பட்ட உத்தியோகங்களை செய்து வருகின்றார்கள். சிலர் அரசாங்க உத்தியோகத்திலும், வேறு சிலர் தனி யார் ஸ்தாபனங்களிலும் பணிபுரிந்து வருகின்றார்கள். இப்படியாக மனி தன் பிழைப்புக்காக பல தொழில்களை செய்து வருகின்றான். அந்த தொழில்களினாலே பலர் நன்மையடை கின்றார்கள். எடுத்துக் காட்டாக, நாடுக ளிலே, அரசாங்கத்தினாலே, பெருந்தெ ருக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றது. அதனால் அங்குள்ள ஜனங்கள் யாவ ரும் நன்மையடைகின்றார்கள். தேவ ஊழியங்களை முன்னெடுத்துச் செல்வ தற்கும் இந்த உலகிலுள்ள போக்குவர த்து சாதனங்களை உபயோகிக்கின் றோம். இப்படியாக ஆசிரியர்கள், கல்வி யை கற்று கொடுக்கின்றார்கள், மருத் துவசேவை, பாதுகாப்பு சேவை போன்ற பலதரப்பட்ட சேவைகளால் நன்மைய டைக்கின்றோம். இன்னும் பல தாய்மார் வீடுகளிலே தரித்திருந்து தங் கள் பிள்ளைகளை ஒழுங்காக வளர்த்து வருகின்றார்கள். இவை யாவற்றிலும் நான் யார்? என்னுடைய பதவி என்ன? ஒரு வேளை என்னுடைய பதவி மனிதர்கள் பார்வையிலே அற்பமாக எண்ணப்பட லாம். அல்லது நான் செய்யும் வேலை அற்பமானது, நான் இல்லாவி ட்டால் என்னுடைய வேலையை செய்வதற்கு ஆயிரக்கணக்கானோர் இருக்கின்றார்கள் என்று நீங்கள் நினைத்துக் கொள்ளலாம். ஆனால், தேவனுடைய பார்வையிலே நீங்கள் விலையேறப்பெற்றவர்கள். நானும், நீங்களும், மற்ற யாவரும், கெட்டுப்போகாமல் முடிவில்லா வாழ்வை அடையும்படிக்கு எல்லாவற்றிற்கும் மேலாக இயேசுவை பிதாவாகிய தேவன்தாமே எங்களுக்காக தந்திருக்கின்றார். நாங்கள் கணக்கு ஒப்பு விக்கப்படும் நாளிலே, அவரவருக்கு கொடுத்த அளவின்படியே கேட்க ப்படும். தேவன் உங்களுக்கு கொடுத்த பொறுப்பு, ஒரு வேளை மற்ற வர்கள் பார்வையிலே அற்பமாயிருக்கலாம், ஆனால் உங்களை தெரி ந்து கொண்டவர் சர்வ வல்லமையுள்ள தேவன் என்பதை நினைத்துக் கொள்ளுங்கள். தம்முடைய சொந்த ஜனமாக, தம்முடைய துதியை சொல்லி வரும் ராஜரீக ஆசாரிய கூட்டமாக எம்மை வேறு பிரித்திருக் கின்றார்.

**1 பேதுரு 2:9**

தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீக மான ஆசாரியக்கூட்ட மாயும், பரிசுத்த ஜாதி யாயும், அவருக்குச் சொந் தமான ஜனமாயும் இரு க்கிறீர்கள்.

**ஜெபம்**: அன்பின் பரலோக தந்தையே, நீர் எனக்குத் தந்த பொறுப்பு எவ்வளவு சிறிதாகவோ அல்லது பெரிதாகவோ இருந்தாலும், அதை மகிழ்வோடு நிறைவேற்றி முடிக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கர்த்தருக்காக காத்திருங்கள்

தம்முடைய பிள்ளைகளுக்கென்று பிதாவாகிய தேவன் தாமே கொடுத்திருக்கும் அநேக வாக்குத்தத்தங்களை பரிசுத்த வேதாகமத்திலே காண்கின்றோம். அதாவது, ஒரு வீட்டிலே இருக்கும் சௌகரியங்கள் யாவும் அந்த குடும்பத்திலுள்ள பிள்ளைகளுக்கு உரித்தானது போல, தேவனுடைய ஆசீர்வாதங்கள் அவருடைய பிள்ளைகளாகிய எங்களுக்கு உரித்தானதாக இருக்கின்றது. அது மட்டுமல்லாமல், தேவன் தாமே, பிரத்தியேகமாக ஒவ்வொருவருடனும் இடைப்படுகின்றவராக இருக்கின்றார். அப்படியாக, ஒரு குறிப்பிட்ட காரியத்தை உன் வாழ்க்கையிலே நான் நடப்பிப்பேன் என்று தேவன் உங்களுக்கு கூறியிருந்தால், அவர் அதை நிறைவேற்றி முடிக்க உண்மையுள்ளவராக இருக்கின்றார். அந்த காரியத்தை தேவன் செய்து முடிக்கும் வரையும் நாங்கள் பொறுமையுள்ளவர்களாக இருக்க வேண்டும். பொறுமையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று கூறும் போது, ‘தேவன் செய்து முடிப்பார் எனவே நான் என் பாட்டிற்கு நான் நினைத்த பிரகாரமாக இருப்பேன்’ என்பது பொருள் அல்ல. தேவன் முன்குறித்த காரியத்தை, எங்களில் முன்கூட்டியே நடத்தி வருகின்றார், அதன்பிரகாரமாகவே அவர் எங்களை அழைத்திருக்கின்றார். இப்பொழுதும் அந்த காரியம் நிறைவேறும்படியாய் எங்களில் கிரியைகளை நடப்பித்து வருகின்றார். அந்த கிரியைகள் என்ன? நாங்கள் எங்கள் வழிகளை தேவனாகிய கர்த்தரிடத்திலே ஒப்புவிக்க வேண்டும். எங்கள் பேச்சு, எங்கள் செயல்கள், எங்கள் சிந்தனைகள் யாவும் அவருடையதாக மாற வேண்டும். குறிப்பாக எங்களில் இருக்கும் மாம்சத்தின் கிரியைகளை, பரிசுத்த ஆவியானவர் எங்களுக்கு உணர்த்தும் போது, அவைகளை விட்டுவிட தீர்மானம் எடுக்க வேண்டும். கோபத்தை நெகிழ்ந்து, உக்கிரத்தை விட்டுவிடு பொல்லாப்புச்செய்ய ஏதுவான எரிச்சல் உனக்கு வேண்டாம் என சங்கீத புத்தகத்திலே வாசிக்கின்றோம். எனவே, எங்களுடைய சிந்தனை, சொல், செயல் யாவையும் கர்த்தருக்கு ஒப்புவித்து அவருடைய குறித்த நேரத்திலே, எங்களுக்காக முன்குறித்தவைகளை நிறைவேற்றும்படி பொறுமையுடன் காத்திருப்போம்.

**சங்கீதம் 37:5**

**உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்.**

**ஜெபம்:** அன்பின் தேவனே, என்னுடைய சிந்தனை, சொல், செயல் யாவும் உம்முடைய வார்த்தையின்படி இருக்கத்தக்கதாகவும் உமக்கு பிரியமான வாழ்க்கை வாழவும் என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பெருமை கொள்ளாதிருங்கள்

சகோதரரே, ஒருவருக்கொருவர் விரோதமாய்ப் பேசாதிருங்கள். சகோதரனுக்கு விரோதமாய்ப் பேசி, தன் சகோதரனைக் குற்றப்படுத்துகிறவன் தன்னையே தான் நியாயாதிபதியாக உயர்த்திக் கொள்கின்றான். இப்படிப்பட்ட சுபாவத்தின் வழியாக மனிதர்கள் தங்களுக்குள்ளே பெருமையை வளர்த்துக் கொள்கின்றார்கள். அதாவது, மற்றவனின் குற்றங்குறைகளை பேசுவதனால், எங்களை நாங்களே மேன்மையுள்ளவர்களாக எண்ணிக் கொள்கின்றோம். தேவன் தாமே நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார். அவருடைய பிள்ளைகளாகும்படி அழைக்கப்பட்ட நாமும், பரம தந்தையின் தெய்வீக சுபாவங்களை தரித்தவர்களாக வாழ வேண்டும். கர்த்தருடைய இராப்போஜன பந்தியை ஆசரிக்கும் நாங்கள், கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கின்றவர்களாக இருக்கின்றோம். எனவே, மற்றவர்களை அல்ல, எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிய வேண்டும். நாங்களும் இந்த உலகத்தோடு நியாயத்தீர்ப்பை அடையாதபடிக்கு, தேவனுடைய பிள்ளைகளாக வாழும் வழிமுறைகளை வேத வாக்கியங்கள் எங்களுக்கு கற்றுக் கொடுக்கின்றது. எனவே, நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் உலகத்தோடு நியாயந்தீர்க்கப்படோம். தேவனைத் துதிக்கும் துதியும், அவருடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட மனுஷனைக் குறித்த சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படலாகாது. தேவனுடைய அநாதி திட்டம் எங்கள் வாழ்வில் நிறைவேறுவதை நாங்கள் தடுத்து நிறுத்தாதபடிக்கு தேவன் முன்னிலையில் எங்களை தாழ்த்துகின்றவர்களாக இருக்க வேண்டும். பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, தேவனுக்கு பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது. பிரியமானவர்களே, கர்த்தர் ஒருவரே நீதியுள்ள நியாயாதிபதி. அவர் எங்கள் மேல் நீடிய பொறுமையுள்ளவராக இருக்கின்றார். **இரக்கஞ்செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்புக் கிடைக்கும் நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மைபாராட்டும்.** எனவே, மற்றவர்களை நியாயந்தீர்க்காமல் எங்களை நாங்கள் ஆராய்ந்து இன்னுமாய் தேவனை கிட்டிச் சேருவோம்.

**யாக்கோபு 4:12**

நியாயப்பிரமாணத்தைக் கட்டளையிடுகிறவர் ஒருவரே, அவரே இரட்சிக்கவும் அழிக்கவும் வல்லவர்

**ஜெபம்**: இரகமுள்ள தேவனே, சகோதரருக்கு விரோதமாய் பேசி, என்னையே நான் மேன்மையுள்ளவனாக எண்ணாதபடிக்கு, உம்மிடத்தில் என்னை தாழ்த்துகின்றேன். நீர் என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# திட்டங்கள்

திட்டமிட்டு வாழ்வதை தேவன் விரும்புகின்றார். தம்மை விசுவாசிக்கின்றவர்கள் தம்முடைய சம்பூரணமான சித்தத்திற்குள் வாழும்படி திட்டம் போடுவதற்கு அவர் தெய்வீக ஞானத்தை அளிக்கின்றவராயிருக்கின்றார். நாங்கள் எந்த ஒரு காரியத்தையும் திட்டம் போடும் போது, தேவனை முதன்மையாகவும் மையமாகவும் வைத்திருக்க வேண்டும். நாங்கள் திட்டம் போடும் காரியங்கள்: தொழில், கல்வி, உல்லாசப் பயணங்கள், மற்றும் வாழ்க்கைக்குரியவைகளாக இருக்கலாம். அவை எவ்வளவு நன்மையானதாக எங்கள் கண்களுக்கு தோன்றினாலும், அவைகளை திட்டம் போடுவதற்கு முன்னதாகவே தேவனுடைய அனுக்கிரகத்திற்காக நாங்கள் ஜெபிக்க வேண்டும். தாவீது தேவனுக்கு பிரியமுள்ள மனுஷனாக இருந்த போதிலும், அவன் ஒரு காரியத்தை செய்ய முன்பதாக, தேவனிடம் வேண்டிக் கொண்ட வேளைகளிளெல்லாம் அவனுக்கு வெற்றி கிடைத்தது. ஆனால், தேவனுடைய அனுசரணையில்லாமல் தன்னுடைய சொந்த அறிவின்படி காரியங்களை செய்த போது அவன் தோற்றுப் போனவனாக இருந்தான். “உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள் அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்.” என்று நீதிமொழிகளின் புத்தகத்திலே வாசிக்கின்றோம். தேவனுக்குச் சித்தமானால் நான் இதை செய்வேன் என்று மனப்பூர்வமாக கூறி அதன்படி வாழ்பவர்களே தேவ ஞானத்தை உடையவர்களாக இருக்கின்றார்கள். எங்கள் ஆவிக்குரிய வாழ்க்கைக்குரிய காரியங்களையும், எங்களுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்புக்களையும் நாங்கள் புறக்கணித்துவிட்டு, மனித அறிவுக்கு எட்டியபடி திட்டங்களை போட்டுவிட்டு, அதை தேவன் அங்கீகரிக்க வேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கக்கூடாது. எனவே நாங்கள் எதை செய்தாலும், எப்படி திட்டமிட்டாலும், ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால், இன்னின்னதைச் செய்வோம் என்று சொல்ல வேண்டும்.

**யாக்கோபு 4:15**

**ஆதலால்: ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால், இன்னின்னதைச் செய்வோம் என்று சொல்ல வேண்டும்.**

**ஜெபம்:** அன்புள்ள தேவனே, என் சுயபுத்தியில் சார்ந்து, இந்த உலக போக்கின்படி திட்டங்களை நான் போடாதபடி, உம்முடைய சித்தத்தின்படி என் திட்டங்களை போட என்னை வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

வெள்ளி | ஆடி 19 — 📖 மாலை வாசகம் – 1 தீமோ 6:10

# இருதயத்தை ஸ்திரப்படுத்துங்கள்

ஒரு எஜமானனானவன், தன்னுடைய தொழிற்சாலையிலே வேலை பார்க்கும் ஊழியர்களுக்கு முன்குறித்த கூலியை வழங்காமல் பல சாட்டுப்போக்குகளை சொல்லி வந்தான். இந்த எஜமானன், தன் வாழ்வில் நீதியை கடைப்பிடிப்பதின் மேன்மையயை உணராமல், அழிந்து போகும் அற்பமான, இந்த உலக ஐசுவரியத்தை தன் வாழ்வில் மேன்மைப்படுத்துகிறவனாய் இருக்கின்றான். தான் செய்வது அநியாயம் என்ற உணர்வு அவன் இருதயத்திலே அற்றுப்போய்விட்டதால், தன் ஊழியர்களின் வாழ்க்கையையும் அவர்களின் குடும்பங்களையும் அற்பமாக எண்ணுகின்றான். இவன் பொருளாசையாகிய, விக்கிரக ஆராதனை உடையவனாக இருப்பதால், இந்த உலக ஐசுவரியத்தை தனக்கு தெய்வமாக்கிக் கொள்கின்றான். பிரியமானவர்களே, நீங்கள் உங்கள் உலக எஜமான்களால் அநியாயமாக நடத்தப்பட்டாலும், உங்கள் சாரத்தை இழந்து போய்விடாதிருங்கள். “என்னுடைய உலக எஜமானனாவன் அநீதியுள்ளவன் ஆகவே நான் அவனிடத்தில் அர்ப்பணிப்போடு வேலை பார்க்க வேண்டியதில்லை” என்ற எண்ணத்திற்கு இடங்கொடாதிருங்கள். எங்களுடைய குடியிருப்பு பரலோகம். எங்களுடைய வாழ்வின் எஜமானான் இயேசு கிறிஸ்து. எனவே, எங்களுடைய பொக்கிஷம் இந்த பூலோகத்திற்குரியதல்ல. எனவே உங்கள் நீதி தேவனுடைய நீதியாக இருக்கட்டும். அநியாயம் செய்கின்றவன் தான் ஆக்கினைத்தீர்ப்பு அடையும்படியாய் தனக்கு கண்ணியை உண்டுபண்ணுகின்றான். தேவ நீதியை தன் வாழ்வில் கைக்கொள்கின்றவன், தேவனுடைய ராஜ்யத்தின் பங்காளியாக இருக்கின்றான். இருள் நிறைந்த உலகிலே பிரகாசிக்கின்ற தீபங்களாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றான். எனவே வெளிச்சத்தின் பிள்ளைகளாகவே எப்போதும் நடந்து கொள்ளுங்கள். கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள். இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடையவேண்டுமென்று, முன்மாரியும் பின்மாரியும் வருமளவும், நீடிய பொறுமையோடேகாத்திருக்கிறான். நியாயம் செய்வதை உங்கள் கரங்களில் எடுத்துக் கொள்ளாமல், தேவ நீதி வெளிப்படும் நாள்வரைக்கும் உங்கள் ஒளி இந்த உலகத்தை பிரகாசிப்பிக்கட்டும்.

**யாக்கோபு 5:8**

**நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள் கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே.**

**ஜெபம்:** சகலத்தையும் ஆளும் பரலோக தேவனே, இந்த உலகத்தின் போக்கின்படி நான் வாழாமல், பொறுமையோடு தேவ நீதி வெளிப்படும்வரை காத்திருக்க என்னை பெலப்படுத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

சனி | ஆடி 20

📖 மாலை வாசகம் – கலா 6:9

# நான் மறக்கப்படுவதில்லை

நான் அநேக நாட்களாக ஜெபித்து வருகின்றேனே, தேவன் என்னுடைய வாழ்வின் காரியங்களை குறித்து கரிசனையற்றுப் போய்விட்டாரோ? தேவனுடைய பார்வையிலே நான் அற்பமானேனோ? அவர் என்னை மறந்தாரோ? கைவிட்டாரோ? என்று பலதரப்பட்ட சிந்தனைகள் மனிதர்கள் உள்ளத்திலே தோன்றுவதுண்டு. சில வேளைகளிலே நாங்கள் நினைத்த காரியம், நாங்கள் முன்குறித்த நேரத்தில், எங்கள் எதிர்பார்ப்பிற்கு அமைய நடைபெறாதவிடத்து இப்படிப்பட்ட தோற்றங்கள் மனதில் எழுவதுண்டு. இப்படியாக தேவன் கைவிட்டாரோ என்னும் எண்ணம் அவராலே தெரிந்து கொண்ட ஜனங்கள் மத்தியிலே எழுந்த போது, தேவன் தீர்க்கதரிசி வழியாக இவ்வாறாக கூறினார். "சீயோனோ: கர்த்தர் என்னைக் கைவிட்டார், ஆண்டவர் என்னை மறந்தார் என்று சொல்லுகிறாள். ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை. இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன் உன் மதில்கள் எப்போதும் என்முன் இருக்கிறது." ஆம் பிரியமானவர்களே, நாங்கள் தாயின் கருவில் உருவாகும் முன்னே எங்களை குறித்த சம்பூரணமான திட்டம் அவரிம் உண்டு. எங்கள் ஏக்கங்களை அறிந்த தேவன் எப்போதும் எங்கள் மேல் கரிசனையுள்ளவராக இருக்கின்றார். தேவன் எங்களுக்கென முன்குறித்தவைகள் நிறைவேறும் என்று விசுவாசத்தோடு பொறுமையாக இருக்க வேண்டும். நான் நினைத்த பிரகாரம் காரியங்கள் நடைபெறவில்லை என விரக்தியடைந்து, உலக போக்கிலே நாங்கள் செயற்படாதபடிக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சிலர் இவ்வண்ணமாக பொறுமையை இழந்து, தாங்கள் நினைத்த வழிகளிலே தீர்மானங்களை எடுத்து, தங்கள் வாழ்க்கையில் இன்னும் அதிகமான நோவுகளை ஏற்படுத்திக் கொள்கின்றார்கள். தம்முடைய குமாரனென்று பாராமல் அவரையே எங்களுக்காக ஒப்புக் கொடுத்தவர், மற்றய நன்மைகளை எங்களுக்கு மறைத்து வைக்க மாட்டார். அவர் ஆசீர்வதிக்கின்ற தேவன்.

**ஏசாயா 49:13**

**கர்த்தர் தம்முடைய ஜனத்துக்கு ஆறுதல் செய்தார் சிறுமைப்பட்டிருக்கிற தம்முடையவர்கள் மேல் இரக்கமாயிருப்பார்.**

**ஜெபம்:** பரலோக தேவனே, நீர் பொய் சொல்ல ஒரு மனிதன் அல்ல. நீர் சொன்னவைகளை நிறைவேற்றி முடிப்பீர் என்று பூரண விசுவாசத்தோடு உம்மில் நிலைத்திருக்க அருள் புரிவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வார்த்தையின்படி வாழுங்கள்

வானமும் பூமியும் ஒழிந்து போனாலும் தேவனுடைய வார்த்தை ஒழிந்து போவதில்லை. அவருடைய வார்த்தையின் வழியாக மனிதர்கள் நித்திய ஜீவனை கண்டடைவார்கள். அவருடைய வார்த்தைகளை அசட்டை செய்து வாழ்பவர்கள், அவருடைய வார்த்தையினால் நியாயந்தீர்க்கப்படுவார்கள். தேவ வார்த்தை ஆரோக்கியமான வாழ்வை கொடுக்கின்றது. விதையாகிய தேவ வார்த்தையை தன் இருதயத்திலே காத்துக் கொள்பவன் தேவனுக்குள் பயபக்தியோடு தன் வாழ்வை காத்துக் கொள்வான். ஆதலால் தேவ வார்த்தைக்குள் அடங்கி இருக்கும் தெய்வீக ஞானம் அவன் இருதயத்தில் இருக்கும். அந்த வார்த்தையானது அவன் கால்களுக்கு தீபமும் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கும். அவன் தன் வாழ்வில் இடறிப் போவதில்லை. “கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான். உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய் உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும். உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சக்கொடியைப்போல் இருப்பாள் உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப் போல் இருப்பார்கள். இதோ, கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுவான்.” ஆனால் தேவ வார்த்தையைக் கேட்டும் அதை அசட்டை செய்து தங்கள் கண்போன வழியிலே வாழ்பவர்கள், மெய் ஞானத்தை வெறுப்பதால், தங்கள் வாழ்விலே பல பிழையான தீர்மானங்கள் எடுத்துக் கொள்கின்றார்கள். அநியாயத்தை உழுது, தீவினையை விதைத்தவர்கள், அதையே அறுக்கிறார்கள். பிரியமானவர்களே, மனிதன் எதை விதைக்கின்றானோ அதை அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான் ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான். நற்கிரியைகளை நடப்பிப்பதிலே சோர்ந்து போகாதிருங்கள். கிறிஸ்து வெளிப்படும் நாளிலே பெரிதான பலனை அறுவடை செய்வீர்கள். தேவனுக்கு பயந்து பயபக்தியோடு அவர் அருளியிருக்கும் வார்த்தைகளின் வழியிலே வாழுங்கள். அந்த வார்த்தையிலே தேவன் அருளி இருக்கும் மெய்ஞானம் அடங்கியிருக்கின்றது.

**கலாத்தியர் 6:7**

**மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.**

**ஜெபம்:** இரக்கமுள்ள தேவனே, நன்மை செய்வதில் சோர்ந்து போகாமல், எப்போதும் உம்முடைய வார்த்தையின்படி நற்கிரியைகளை நடப்பித்து வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பரமபிதா மகிமைப்படும்படிக்கு...

காலை எழுந்ததும், அந்த நாளுக்குரிய ஆயத்தங்கள், கடமைகள், பொறுப்புக்கள் யாவையும் அவசரவசரமாக செய்து முடித்துவிட்டு அந்த நாளுக்குரிய அலுவல்களில் விரைந்து செல்லும்படியாக மனிதர்கள் செயற்படுவதுண்டு. அந்த நாளுக்குரிய, இன்னும் அதி விசேஷமான காரியங்களும் உண்டு. சிலர் ஆராதனைக்கு செல்ல வேண்டும் என்றும், வேறு சிலர் வேலை மற்றும் வெளி அலுவல்கள் உண்டு என்றும் இன்னும் சிலர் தங்கள் இருதயத்திற்கு பிடித்த பொழுது போக்குகள் அந்நாளிலே உண்டு என்றும் அந் நாளுக்குரிய அட்டவணைகளை போட்டுக் கொள்கின்றார்கள். தாங்கள் போட்டுக் கொள்ளும் அட்டவணைக்குள் தேவனையும் உட்புகுத்தி விடுவார்கள். காலை எழுந்ததும் இறை வணக்கம். வேதத்தை வாசித்து, ஜெபித்து விட்டேன். அந்தக் கடன் முடிந்து விட்டது என்று தேவனை எங்கள் வாழ்வின், ஒரு நாளின் ஒரு பகுதிக்கு தள்ளிவிடக் கூடாது. எங்கள் அட்டவணையில் தேவனை உட்புகுத்தாமல், தேவனுடைய அட்டவணைக்குள் எங்கள் வாழ்வு அடங்கி இருக்க வேண்டும். அப்படியானால், எங்கள் நாளாந்த அலுவல்களை செய்யாமல் நாள் முழுவதும் ஒரு இடத்தில் இருந்து நாங்கள் வேதம் வாசித்து ஜெபித்துக் கொண்டிக்க வேண்டுமா? கருப்பொருள் அதுவல்ல. அப்படியாக மாதத்தில் ஒரு நாளையாவது நியமித்து, தேவனுடைய பாதத்தில் தரித்திருப்பது நல்லது. தேவனுடைய பாதத்தில் இருந்து நேரம் செலவிடுவதை ஒரு கடனாக எண்ணக் கூடாது. அந்த விடயம் எங்கள் சுவாசம் போல எங்கள் இயல்பான காரியமாகவும், நாங்கள் ரசித்து ருசித்து செய்யும் காரியமாகவும் இருக்க வேண்டும். தினமும் எங்கள் நாளாந்த அலுவல்களுக்கு கடந்து செல்லும் போது, அவை ஒவ்வொன்றும் தேவனுக்கு ஏற்புடையதாகவும், அவருடைய வார்த்தையின்படியேயும் செய்யப்பட வேண்டும். உதாரணமாக, நாங்கள் வேலைக்கு செல்லும் போது, மற்றவர்கள் எங்களுடைய நன்நடக்கையையும் மாதிரியான வாழ்க்கை யையும் கண்டு இந்த நபர், உண்மையிலேயே ஒரு கிறஸ்தவன், இவர் விசேஷித்தவர் என்று கூறும்படியாக எங்கள் நடவடிக்கைகள் இருக்க வேண்டும்.

**மத்தேயு 5:16**

இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக்கண்டு,பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.

**ஜெபம்**: பரிசுத்தமுள்ள தேவனே, நான் மனப்பூர்வமாக உம்மை சேவிக்கவும், ஆர்வத்துடன் உம்முடைய சமுகத்தை நாடவும், என் வாழ்க்கையை உம் சித்தம் போல வாழவும் என்னை வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இருதயத்தின் நினைவுகள்

யார் என்னைப்பற்றி இப்படியாக கூறியிருப்பார்கள்? காரியம் இப்படியாக நடந்திருக்குமோ? இந்த மனிதர், என்னை அங்கே கண்டார், எனவே அவர்தான் போய் என்னைப் பற்றிக் கோள் சொல்லியிருக்க வேண்டும் அல்லது அந்த மனிதன் தான் நிச்சயமாக இதை செய்திருப்பார் என்று, எந்த ஆதாரங்களும் இல்லாமல் மனிதர்கள் தங்கள் ஊகங்களை நிதர்சனமாக்க முயற்சி செய்வதுண்டு. இப்படிப்பட்ட சந்தேகங்கள் யாவும் பாரபட்சமானவைகள். இருதயங்களை ஆராய்ந்தறிகின்ற தேவன் எங்கள் நினைவுகளை அறிந்திருக்கின்றார். ஒரு சகோதரனையோ சகோதரியைக் குறித்தோ, சந்தேகத்தினால் உண்டாகும் தவறான அபிப்பிராயம் எங்கள் மனதில் தோன்றும் போது, அவைகளை தேவனுடைய பாதத்திலே ஜெபத்திலே வைத்துவிடுவது நல்லது. மாறாக, அதை விட்டுவிடாமல், அதைக் குறித்து ஆழமாக யோசித்து, மற்றவனை எங்கள் உள்ளத்திலே குற்றப்படுத்தும் போது, அதனால் மற்றவர்களை நியாயந்தீர்க்கின்றவர்களாக மாறிவிடுவோம். கசப்பான வேர் உள்ளத்திலே முளைத்தெழும்ப இடங் கொடுக்கின்றவர்களாக மாறிவிடுவோம். இப்படி செய்வோமாக இருந்தால், நாளடைவிலே நாங்களே எங்கள் சமாதானத்தை குலைத்துப் போடுகின்றவர்களாக இருப்போம். மற்றவர்களோடு பேசி தீர்க்கக் கூடிய காரியங்களை சரியான சந்தர்ப்பத்திலே தயவாக பேசி எங்கள் சந்தேகங்களை தீர்த்து வைக்க கூடுமானால் அப்படியே செய்யுங்கள். அப்படி செய்ய முடியாத விடத்து, ஒன்றையும் குறித்து கவலை கொள்ளாமல், கர்த்தரிடத்திலே யாவையும் ஒப்புவியுங்கள். கோபத்தை நெகிழ்ந்து, உக்கிரத்தை விட்டுவிடு பொல்லாப்புச்செய்ய ஏதுவான எரிச்சல் உனக்கு வேண்டாம். நியாயப்பிரமாணத்தைக் கட்டளையிடுகிறவர் ஒருவரே, அவரே இரட்சிக்கவும் அழிக்கவும் வல்லவர். எனவே மற்றவர்களை குறித்த சந்தேகங்களை விட்டுவிட வேண்டும். சந்தேகம் தெய்வீக சுபாவம் அல்ல. அது மாம்சத்திற்குரிய சுபாவம். எங்கள் வாயின் வார்த்தைகள் மட்டுமல்ல, இருதயத்தின் தியானங்களும் தேவனுடைய சமுகத்திலே அவருக்கு பிரியமானதாக இருக்க வேண்டும்.

**சங்கீதம் 19:14**

**என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக.**

**ஜெபம்:** இருதயங்களை ஆராய்ந்து அறிகின்ற தேவனே, சந்தேகங்களினால் உண்டான கசப்பை நான் என் இருதயத்திலே வளர்த்து கொள்ளாமல் இருக்கும்படிக்கு என்னை வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உறுதியாய் பற்றிக் கொள்ளுங்கள்

இந்த உலகத்திலே வாழும் நாட்களிலே நாங்கள் பல கட்டங்களை கடந்து செல்கின்றோம். சிறுவர்களாக இருக்கும் நாட்களிலே பெற்றோருக்கு கீழ்ப்படிவுள்ள பிள்ளைகளாக இருக்கும்படியாகவும், திருமணமாகிய பின்பு நல்ல கணவனாக அல்லது மனைவியாக இருக்கும்படிக்காகவும், பிள்ளைகளை பெற்ற பின்பு, பிள்ளைகளை தேவ வழியிலே நடத்தும் அன்புள்ள பெற்றோராக இருக்கும்படியாகவும் அழைக்கப்பட்டிருக்கின்றோம். இப்படியாக பாடசாலை, வேலைகள், ஊழியங்கள் என்று அழைப்பின் பட்டியல் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் வேறுபட்டிருக்கலாம். இவை யாவற்றின் மத்தியிலும் தேவன் எங்களுக்கு கொடுத்த பிரதானமான பரலோக ராஜ்யத்திலே அவரோடு நீடூழி வாழும்படியான அழைப்பை பெற்றிருக்கின்றோம். தம்முடைய சொந்த குமாரர் குமாரத்திகளாகும்படி புத்திரசுவீகாரத்தின் ஆவியை தந்திருக்கின்றார். இந்த பிரதானமான அழைப்பை நாங்கள் விசுவாசித்து, ஏற்றுக் கொண்டு, மன உறுதியுடன் வாழும்படிக்கு அநேக வாக்குத்தத்தங்களை தந்திருக்கின்றார். அந்த வாக்குத்தத்தங்களில் பிரதானமான வாக்குத்தத்தமாக உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன் ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப் போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன் என்றார். எனவே உறுதியாய் பற்றிக் கொள்ளுங்கள். ஒரு வேளை தற்காலத்து நிலை வறுமையாக இருக்கலாம் அல்லது உலக செல்வத்தோடு இருக்கலாம். கஷ்டங்கள் நிறைந்த நாட்டிலே வாழலாம் அல்லது அபிவிருத்தி அடைந்த நாட்டிலே வாழலாம். பல இழப்புக் களை சந்திக்க நேரிடலாம், அநியாயங்களுக்கு இரையாகலாம், உயர் ந்திருக்கலாம் அல்லது தாழ்ந்திருக்கலாம். என்னதான் நடந்தாலும், தேவனுக்காக காத்திருக்கின்றவர்களை அவர் வந்து மறுபடியும் தம்மோடு நித்தியமாய் வாழும்படி சேர்த்துக் கொள்ளுவார். எனவே வாழ்க்கையில் என்னதான் நடந்தாலும் மன உறுதியுடன் இருங்கள்.

**யோவான் 14:3**

**நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்.**

**ஜெபம்:** சர்வவல்ல தேவனே, நீர் மறுபடியும் வந்து என்னை உம்மிடம் சேர்த்துக் கொள்ளும் நாள் வரை நான் உம்முடைய பெரிதான அழைப்பைக் காத்துக்கொள்ள எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பெரிதான சந்தோஷத்தை நோக்கி

தேவனுடைய அநாதி தீர்மானத்தின் அழைப்பு எங்களில் வெளிப்பட்ட நாளிலே, மிகவும் சந்தோஷத்தோடு எங்கள் வாழ்க்கையை தேவனுக்கு ஒப்புக் கொடுத்தோம். இந்த உலகத்திலே பெரிதும் அருமையுமாக கருதப்படும் பல பெரிதான காரியங்களை குப்பையும் நஷ்டமும் என்று தள்ளிவிட்டோம். இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்கும் பாதையில் இந்த உலகத்திலுள்ள மனிதர்களால் உண்டான அவமானங்களையும் நிந்தைகளையும் சகிக்க ஆயத்தமாக இருந்தோம். இப்படியான உன்னதமான அழைப்புக்காக எதையும் விட்டுவிட ஆயத்தமுள்ளவர்களாக இருந்தோம். காரியம் அப்படியிருக்க இன்று ஏன் சிறிய காரியங்களை விட்டுவிட முடியாமல் இருக்கின்றது. உடன் சகோதரர்களோடு உண்டாகும் சிறிதான மனத்தாங்கல்கள் ஏன் பெரிதானதாக தோன்றுகின்றது? பிரியமானவர்களே, சற்று தரித்திருந்து சிந்தித்துப் பாருங்கள். குடும்பத்திலே, வேலை இடத்திலே, கல்வி நிலையங்களிலே, நண்பர்கள் மத்தியிலே, சபை ஐக்கியத்திலே, வெளி இடங்களிலே ஏற்படும் அசௌகரியங்கள் ஏன் எங்கள் பிரகாசமுள்ள மனக் கண்களை குருடுபடுத்தி விட நாங்கள் இடங் கொடுக்க வேண்டும். தேவன் யார் என்பதையும், எங்கள் பிரதானமான அழைப்பு என்ன என்பதையும், தேவன் கொடுத்திருக்கும் பெரியதான வாக்குத்தத்தத்தையும் நாங்கள் நன்கு அறிந்து விசுவாசிக்கின்றோம். அப்படியிருக்க, நாங்கள் ஏன் சிறிய காரியங்களுக்காக பெரிதான அழைப்பை அற்பமாக எண்ண வேண்டும்? ஒரு துளி விஷம் ஒரு பாத்திரத்திலுள்ள தண்ணீரை மாசுபடுத்திவிடும். கொஞ்சம் புளித்தமா முழுவதையும் உப்பப்பண்ணிவிடும். எனவே எங்களை அழுத்தும் பாரங்களை தள்ளிவிட்டு, தமக்கு வந்த எல்லா பாடுகளையும் தாங்கி கொண்ட எங்கள் இரட்சகராகிய இயேசுவைப்போல, எங்களின் அழைப்பின் மேன்மையை உணர்ந்தவர்களாய், அந்த பெரிதான சந்தோஷத்தை நோக்கி பொறுமையயோடே ஓடக்கடவோம். பெலப்படுத்தும் தேவன் எங்களோடு இருக்கின்றார்.

**எபிரெயர் 12:2**

அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமான த்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்.

**ஜெபம்:** அன்பின் பரலோக தந்தையே, இந்த உலகத்தோடு அழிந்து போகும் அற்பமான பெருமைகளுக்காக நீர் வைத்திருக்கும் அளவிட முடியாத சந்தோஷத்தை இழந்து போகாதபடி என்னை காத்துக் கொள்ளும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நல்ல ஊழியன்

தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். இப்படியாக தம்முடைய உன்னதமான அபிஷேகத்தாலே தம்முடைய மாறாத அன்பை எங்கள் மேல் ஊற்றியிருக்கின்றார். இது எங்க ளுடைய குடும்ப அந்தஸ்த்தினாலோ, எங்கள் கிரியைகளினாலோ உண்டாகவில்லை. நாங்கள் கிறிஸ்துவை அறியாமல் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்திருந்தாலும் அதன் முடிவு அழிவு. ஆதலால் தேவனுடைய அன்பை பெறுவதற்கு எங்களிடம் இருந்த தகுதி என்ன? எங்கள் பாவங்களை அவர் மன்னித்தார். புது வாழ்வு தந்திருக்கின்றார். உன்னத அபிஷேகத்தை தந்திருக்கின்றார். அப்பா பிதாவே என்று கூப்பிடும் தகுதியை தந்திருக்கின்றார். காரியம் இப்படியிருக்க அவருடைய பிள்ளைகளாகிய எங்களுக்கு ஏன் மற்றவர்களை அன்பு செய்ய முடியாதிருக்கின்றது? ஏன் பிறரை அன்பு செய்ய தகுதியை தேடுகின்றோம்? ஏன் வீட்டில், வேலையில், பாடசாலையில், வெளி இடங்களில், ஆலயத்தில் மற்றவர்களை மன்னிக்க முடியாமல் இருக்கின்றது? சற்று எங்கள் நிலையை இன்று ஆராய்ந்து பார்ப்போம். இயேசு கிறிஸ்துவின் நல்ல ஸ்தானாதிபதிகளாகும்படி அழைக்கப்பட்டிருக்கும் நாம், அவருடைய குணதிசயங்களை வெளிப்படுத்தும் நடமாடும் நிரூபங்களாக இருக்க வேண்டும். ஒரு எஜமானன் தன் ஊழியனின் பெரிய கடனை அவனுக்கு மன்னித்துவிட்டான். ஆனால் அந்த ஊழியன், தன்னிடம் சிறிய கடனை பெற்ற தன் ஊழியனின் கடனை மன்னிக்காமல், அவனை காவலில் போட்டான். அதாவது, இன்று நாங்கள் குற்றம் செய்யும் போது, இரகசியமாக தேவனுடைய சமுகத்திற்கு சென்று மன்னிப்பை கேட்கின்றோம். அவருடைய நியாத்தீர்ப்பை அல்ல, இரக்கத்தை கேட்டு பெற்றுக் கொள்கின்றோம். ஆனால் இன்னுமொருவர் செய்யும் சிறிய குற்றத்தை பகிரங்கமாக்கி, மேலிடத்தில் அறிவித்து, விசாரணையை நடப்பிக்கும்படி கேட்போமாக இருந்தால், நாங்களும் கடனை மன்னிக்காத ஊழியனைப் போல அநீதியுள்ளவர்களாக இருப்போம். நாம் அப்படியிராமல் கிறிஸ்துவின் சாயலில் வளர்ந்து பெருகுவோம்.

**யோவான் 15:12**

நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது.

**ஜெபம்:** என் எஜமானனாகிய தேவனே, அநீதியுள்ள ஊழியக்காரனைப் போல உம்மிடம் பெற்ற இரக்கத்தை மறுதலியாமல், மற்றவர்களுடனும் பகிர்ந்து கொள்ள என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஒருமைப்பாட்டில் தேறினவர்கள்

இந்த பூமியிலே மனிதர்கள் மத்தியிலே பலதரப்பட்ட பாகுபாடுகளும், கருத்து முரண்பாடுகளும் உண்டு. அரசியல் மட்டங்களிலே பல கட்சிகளும் அவை ஒவ்வொன்றிற்கும் அதன் அதன் கொள்கைகளும் உண்டு. இப்படியாக வீட்டுக்கு வீடு, பட்டணத்திற்கு பட்டணம், நாட்டிற்கு நாடு என்று வேறுபாடுகள் உண்டு. ஆனால் உன்னதமான தேவனுடைய பிள்ளைளாகும்படி அழைக்கப்பட்ட நாங்கள் கிறிஸ்துவிலே ஒரே சரீரமாய் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றோம். அந்த ஒருமைப்பாட்டிலே முற்றிலும் தேறினவர்களாகும்படி நாளுக்கு நாள் எங்கள் உள்ளான மனிதன் புதிதாக்கப்பட வேண்டும். அந்த வளர்ச்சியை ஒரு நாளில் அடையமுடியாது. விசுவாசிகள் கூடி வரும் இடங்களிலே அசௌகரியங்கள் உண்டாகுவதுண்டு. இவ்வண்ணமாக ஆதி திருச்சபையிலே, சீஷர்கள் பெருகினபோது, கிரேக்கரானவர்கள், தங்கள் விதவைகள் அன்றாடக விசாரணையில் திட்டமாய் விசாரிக்கப்படவில்லையென்று, எபிரெயருக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள். அப்பொழுது பன்னிரு சீஷர்களும் ஒன்றுகூடி பந்தி விசாரணைக்காக ஏழுபேரை தெரிவு செய்து, அங்கிருந்த பிரச்சனையை தீர்த்து வைத்தார்கள். இப்படியாக எங்கள் மத்தியிலே உண்டாகும் சிறிய பிரச்சனைகளையும் நாங்கள் ஒவ்வொருவரும், கிறிஸ்துவின் பிரமாணமாகிய அன்பை மையமாக வைத்து, தீர்த்து வைக்க வேண்டும். இசைந்த ஆத்துமாக்களாக நாங்கள் கிறிஸ்துவைப் பற்றும் ஏக சிந்தையுள்ளவர்களாக வாழவேண்டும். உன்னதமானவருடைய பிள்ளைகளாகும்படி அழைக்கப்பட்ட எங்களுக்குள் ஏற்படும் கருத்து வேறுபாடுகளை, நாங்கள் தீர்த்து வைக்க முடியாவிடின், தேவனை அறியாத அதிகாரங்கள் மத்தியிலே, வேற்றுமைகள் தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? முதலாவதாக, தேவ பிள்ளைகளாகிய நாங்கள், எங்கள் மத்தியிலே உண்டாகும் பிரச்சனைகளை தீர்க்கும்படி, சமாதானத்தை உண்டாக்கும் கிறிஸ்துவின் ஸ்தானதிபதிகள் என்ற மனநிலை உடையவர்களாக வேண்டும்.

**பிலிப்பியர் 2:3**

**ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்.**

**ஜெபம்:** சமாதானத்தின் தேவனே, உம்முடைய வீடு கலகவீடு அல்ல. உம்முடைய வீட்டில் ஐக்கியமும் சமாதானமும் தங்கும் என்ற உண்மையை உணர்ந்து வாழ என்னை வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நன்மை செய்யத் தாமதம் ஏன்?

ஒரு சகோதரனோ சகோதரியோ யாதொரு இடுக்கண்ணில் அகப்பட்டிருக்கும் போது, உதவி செய்யாமல் இருப்பதற்கு காரணங்களை தேடாமல், முதலாவதாக அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற மனநிலை உண்டாக வேண்டும். எங்களுக்கு உதவி செய்யக்கூடிய பெலன் (சூழ்நிலை) இருந்தால் நாங்கள் நிச்சயமாக உதவி செய்ய வேண்டும். உதவி செய்ய திராணியில்லாதவர்களாகவும் அல்லது அப்படி உதவி செய்வதற்கு நிர்வாகமோ சூழ்நிலையோ இல்லாதிருந்தால். தேவனுடைய பாதத்தில் அமர்ந்திருந்து அவர்களுக்காக தேவனிடம் வேண்டிக் கொள்ள வேண்டும். ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகையில் கள்ளர் கையில் அகப்பட்டான் அவர்கள் அவன் வஸ்திரங்களை உரிந்துகொண்டு அவனைக் காயப்படுத்தி, குற்றுயிராக விட்டுப் போனார்கள். அந்த வழியிலே வந்த சமாரியன் அவனைக் கண்டு, மனதுருகி, கிட்ட வந்து, அவனுடைய காயங்களில் எண்ணெயும் திராட்சரசமும் வார்த்து, காயங்களைக் கட்டி, அவனைத் தன் சுயவாகனத்தின்மேல் ஏற்றி, சத்திரத்துக்குக் கொண்டுபோய், அவனைப் பராமரித்தான். அந்த சமாரியன், காயப்பட்டவனை நியாயந் தீர்க்கவில்லை. ஆனால் இன்று பல மனிதர்கள் ஞானமாக நடந்து கொள்ள வேண்டும் என்று, கிறிஸ்து தங்கள் மேல் காட்டும் அன்பை மறந்து போய்விடுகின்றார்கள். யாராவது ஒரு மனுஷன், ஏதாவது நெருக்கத்தில் நெருக்கத்தில் அகப்பட்டால், அந்த மனுஷன் யார்? எந்த கோத்திரத்தான்? பாவியான மனிதனா? ஏன் தனியே போனான்? இவனை தேவன் தண்டித்திருக்கின்றாரோ? இவனுக்கு உதவி செய்தால் என்னை பற்றி ஜனங்கள் என்ன சொல்வார்கள்? இவன் உதவி பெற்ற பின்பு ஒழுங்காக வாழ்வானோ? என்று பல கேள்விகளை கேட்டுக் கொள்கின்றார்கள். அறிந்தோ அறியாமலோ மற்றவர்கள், பிரச்சனைகளிலே அகப்படலாம். அதேபோல நாங்களும் அகப்படுவதுண்டு. எனவே, நன்மை செய்யும் படிக்கான சந்தர்ப்பம் ஏற்படும் போது, தாமதிக்காமல் அதை செய்யுங்கள். உன்னிடத்தில் பொருள் இருக்கையில் உன் அயலானை நோக்கி: நீ போய்த் திரும்பவா, நாளைக்குத் தருவேன் என்று சொல்லாதே.

**நீதிமொழிகள் 3:27**

**நன்மைசெய்யும்படி உனக்குத் திராணியிருக்கும் போது, அதை செய்யத்தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே.**

**ஜெபம்:** இரக்கமுள்ள தேவனே, மற்றவர்களுடைய குறைவுகளை கண்டு அதை நியாயந்தீர்க்காமல், என்னால் முடிந்தளவு மனதார அவர்களுக்கு உதவி செய்யும்படியான இருதயத்தைத் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

**திங்கள் | ஆடி 29** | 📖 மாலை வாசகம் – சங்கீதம் 84:1–12

# ஆற்றித் தேற்றும் நேசர்

மிகவும் வறட்சியான காலத்திலும், மழையிலும், புயலிலும் வளர்ந்தோங்கி கனி கொடுக்கும் மரங்களை நாங்கள் கண்டிருக்கின்றோம். அந்த மரங்கள் எந்த சூழ்நிலையிலும், தாங்கள் நற்கனி கொடுப்பதை நிறுத்தி விடுவதில்லை. அதே போல இந்த உலகத்திலே உபத்திரவங்கள் உண்டு. எங்கள் வாழ்க்கையிலும் சவால்கள் உண்டு. பல போராட்டங்கள் மத்தியிலே மனிதர்கள் வலுவிழந்து இளைப்படைந்து போய்விடுகின்றார்கள். சில வேளைகளிலே, வெளியே வாழ்க்கை நன்றாக ஓடிக் கொண்டிருந்தாலும், மனதிலே சமாதானம் இல்லாமல் வாடுவோர் பலர். என்னிடத்தில் வாருங்கள் நான் இளைப்பாறுதல் தருவேன் என்று இயேசு கூறியிருக்கின்றார். இயேசு கிறிஸ்துதாமே எங்கள் ஆத்துமாவை போஷித்து, திருப்தியாக்கி, ஆறுதல் அருள்கின்றார். ஆழமாக வேர்விட்டு வளர்ந்திருக்கும் விருட்சம் இந்த உலகின் காலநிலையில் தங்கியிருப்பதில்லை. வெளியே மழை பெய்தாலும், கடுமையான வெயிலாக இருந்தாலும், அந்த மரம் வாடிப் போவதில்லை. அதே போல இயேசு கிறிஸ்துவிலே நிலைத்திருப்பவர்களின் வாழ்வும் இந்த உலகம் தரும் உயர்விலோ அல்லது தாழ்விலோ தங்கியிருப்பதில்லை. இந்த உலக செல்வங்கள் அவர்களை உயர்த்தி வைத்தாலும் அல்லது அவர்களை தாழ்த்தி வைத்தாலும், அவர்களுக்கு உள்ளே இருக்கும் சமாதானம் பெருகிக் கொண்டிருக்கும். மனச் சோர்வுகள் அழுத்தும் போது இயேசுவை நோக்கிப் பாருங்கள். பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்டித்த கர்த்தராகிய அநாதிதேவன் சோர்ந்துபோவதுமில்லை, இளைப்படைவதுமில்லை. இதை நீ அறியாயோ? இதை நீ கேட்டதில்லையோ? அவருடைய புத்தி ஆராய்ந்து முடியாதது. சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார். இளைஞர் இளைப்படைந்து சோர்ந்துபோவார்கள், வாலிபரும் இடறிவிழுவார்கள். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலனடைந்து, கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள் அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள். அவர் தம்முடையவர்களை, ஆற்றித் தேற்றி, போஷித்து, திருப்தியாக்கி, இளைப்பாறுதலை கொடுக்கின்றவர்.

**சங்கீதம் 107:8**

தவனமுள்ள ஆத்துமாவைக் கர்த்தர் திருப்தியாக்கி, பசியுள்ள ஆத்துமாவை நன்மையினால் நிரப்புகிறாரென்று,

**ஜெபம்:** சகல ஆறுதலின் தேவனே, இந்த உலகத்தினால் உண்டாகும் அழுத்தங்களைக் கண்டு, மனமடிந்து போகாமல், இயேசுவை நோக்கி பார்த்து ஆறுதல் அடையும்படி என்னை வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

செவ்வாய் | ஆடி 30 | 📖 மாலை வாசகம் – ரோமர் 10:11

# முன் குறித்த நேரம் வரை...

> **யோபு 23:14**
>
> எனக்குக் குறித்திருக்கிறதை அவர் நிறைவேற்றுவார்

தேவன் முன்குறித்த நேரம் வரைக்கும் நாங்கள் அவருடைய வாக்கை நம்பி பொறுமையாக இருக்க வேண்டும். அவர் பொய் சொல்ல ஒரு மனிதன் அல்ல. மனம்மாற அவர் மனுபுத்திரனுமல்ல. நாளாந்தம் எதிர்நோக்கும் சவால்கள் கார்மேகம் போல எங்களை சூழ்ந்து கொள்ளும் போது, தேவன் மேல் கொண்ட நம்பிக்கையை நாங்கள் இழந்து, எங்கள் அறிவுக்கு எட்டியபடி பேச்சுகளை பேசாமலும், கிரியைகளை நடப்பிக்காமலும் தேவனுடைய வாக்குத்தத்தத்தை அறிக்கையிட்டு, அவருடைய கற்பனைகளின் வழியைவிட்டு அகன்றுபோகமல் இருக்க வேண்டும். யோபு என்னும் பக்தனுக்கு வந்த நெருக்கங்களை நாங்கள் அறிந்திருக்கின்றோம். தனக்குண்டான யாவற்றையும் இழந்து போனான். கடும் உபத்திரவத்தின் மத்தியிலும் அவன் தேவனில் கொண்ட நம்பிக்கையில் மனந் தளர்ந்து போகவில்லை. “ஆனாலும் நான் போகும் வழியை அவர் அறிவார் அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன். என் கால்கள் அவர் அடிகளைப் பற்றிப்பிடித்தது. அவருடைய நெறியைவிட்டு நான் சாயாமல் அதைக் கைக்கொண்டேன். அவர் உதடுகளின் கற்பனைகளை விட்டு நான் பின்வாங்குவதில்லை. அவருடைய வாயின் வார்த்தைகளை எனக்கு வேண்டிய ஆகாரத்தைப் பார்க்கிலும் அதிகமாய்க் காத்துக்கொண்டேன். அவரோவென்றால் ஒரே மனமாயிருக்கிறார் அவரைத் திருப்பத்தக்கவர் யார்? அவருடைய சித்தத்தின்படியெல்லாம் செய்வார். எனக்குக் குறித்திருக்கிறதை அவர் நிறைவேற்றுவார்” என்று யோபு அறிக்கையிட்டான். தேவன், அவனுக்கு முன்பிருந்த ஆசீர்வாதத்தைவிட இரட்டிப்பான ஆசீர்வாதத்தினால் அவனை ஆசீர்வதித்தார். பிரியமானவர்களே, எங்கள் வாழ்க்கையில் நெருக்கங்கள் அலையலையாய் வரும் போது, தேவனுடைய வாக்குத்தத்தங்களை எங்களுக்கு வேண்டிய உணவைப் பார்க்கிலும் அதிகமாக காத்துக் கொள்ள வேண்டும். நாங்கள் தவறுகளின் மேல் இன்னும் அநேக தவறுகளை செய்து, அவைகளின் மத்தியில் உழன்று, எங்கள் வாயினால் தேவனை தூஷிப்பதையே எதிராளியாகிய பிசாசானவன் விரும்புகின்றான். நாங்கள் அந்த நிலைக்கு தள்ளப்படாமல், இக்கட்டு நேரத்தில் தேவனுடைய வாக்கை இன்னும் அதிகமாக அறிக்கையிடுவதில் உறுதியாய் தரித்திருப்போம்.

**ஜெபம்**: பரலோக தந்தையே, நீர் வைத்திருக்கும் பெரிதான ஆசீர்வாதங்களை இழந்து போகாமல், உம்முடைய வாக்கை நம்பி, காத்திருக்க எனக்கு பொறுமையைத் தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# முழு இருதயத்தோடு

வார இறுதி நாட்களிலே, சில சிறார்கள், காலை எழுந்ததும், வழக்க மாக அவர்கள பிடிவாதமாக இருக்கும் காரியங்கள் யாவையும், எந்த வித முறைப்பாடும் இல்லாமல் செய்து விடுவார்கள். கொடுக்கும் ஆகா ரத்தை உண்டுவிட்டு, அவசரவசரமாக தங்கள் பாடசாலை வேலைகள், மற்றும் பெற்றோர் கொடுத்த சிறு பொறுப்புகள் யாவையும் கூடிய சீக்கிரத்தில் செய்து முடித்து விடுவா ர்கள். இவைகளை விட அவர்கள் மன திற்கு பிரியமான பொழுது போக்குக ளில் அதிக நேரம் செலவிட வேண்டும் என்ற ஆர்வம் அவர்கள் உள்ளத்தில் இருப்பதால், மற்றய காரியங்கள் யா வும் கடமையை தீர்ப்பது போல செய்து முடித்து விடுகின்றார்கள். இந்த பிரகா ரமாக வாழும் வாழ்க்கை கிறிஸ்தவ வாழ்க்கை அல்ல. ஆலயம் சென்று விட்டேன், வேதத்தை வாசித்து விட்டேன், ஜெபம் செய்து விட்டேன் என் பதுடன் முடிவடைவதில்லை. இவைகளை நாங்கள் செய்து வருவது நல்லது. அத்துடன் நின்றுவிடாது, நாங்கள் கற்றுக் கொண்ட வேத பிரமாணங்களின்படி எங்கள் முழு வாழ்க்கை யும் அமைய வேண்டும். வீட்டில், வேலையில், பாடசாலையில், ஆலயத்தில், வெளி இடங்க ளில் நாங்கள் எதை செய்தாலும் அவை தேவனுக்கு ஏற்புடையதாக இருக்க வேண்டும். கடமைக்காக அல்ல, தேவனை அறிகின்ற அறி வின் மேன்மைக்காக யாவற்றையும் நஷ்டம் என்றும் குப்பையென்றும் விட்டுவிட வேண்டும். எப்படியாக ஒரு மணவாட்டி கறைதிறை அற்ற வளாக, தான் நேசிக்கும் மணவாளனுடன் திருமண நாளை எதிர் பார் த்து காத்திருக்கின்றாளோ, அதற்கொப்பனையாக நாங்கள் எங்கள் நேசர் இயேசுவின் மேல் வைக்கும் நேசம் நாங்கள் விரும்பும் வேறு எந்த காரியங்களை விட முதன்மையாக எங்கள் இருதயத்தின் வாஞ்சையாக மாற வேண்டும். சிறார்கள் மட்டுமல்ல, பெரியவர்களும், தங்களுக்கு பர வசம் உண்டாக்கும் தங்கள் பொழு து போக்குகளை செய்வதற்காக, தேவ காரியங்களையும் பின்போடுகின்றார்கள். விலைமதிக்க முடியாத இரட்சிப்பை சமரசம் செய்கின் றார்கள். சாமுவேல் தீர்க்கதரிசி, தேச த்து ஜனங்களுக்கு கூறிய அறிவுரையின்படியே, நாங்கள் தேவ பய த்துடன், எங்கள் **முழு இருதயத்தோடும்** அவரை உண்மையாக சேவி க்க வேண்டும்.

**1 சாமுவேல் 12:24**

**நீங்கள் எப்படியும் கர்த்த ருக்குப் பயந்து, உங்கள் முழுஇருதயத்தோடும் உண்மையாய் அவரைச் சேவிக்கக்கடவீர்கள்**

**ஜெபம்:** அன்பின் தேவனே, களங்கமில்லாத உம்முடைய திவ்விய அன்பினால் எங்களை அழைத்த அழைப்பின் மேன்மையை உணர்ந்து, முழு இருதயத்துடன் உம்மை சேவிக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அன்பான வாசகர்களுக்கு!

**'உள்ளான மனிதன்'** பிரதியை பெற்றுக் கொள்ளுங்கள்!

உள்ளான மனிதன் சஞ்சிகையின் **மென்பிரதியை** எங்கள் இணையத்தளத்தில் வாசிக்கலாம். அத்துடன் அனுதின தியானம் என்ற தலைப்பின் கீழ், ஒரு **தனிப்பட்ட இணைய -த்தள பக்கமும்** பதிவேற்றப்பட்டுள்ளது. புத்தகங்களை தபால் மூலம் பெற்றுக்கொள்ள, உங்கள் முகவரியை, மின்-அஞ்சல் ஊடாகவோ, அல்லது தொலைபேசி ஊடாகவோ எங்களுக்குத் தெரியப்படுத்தலாம். அல்லது அடுத்த பக்கத்தி லுள்ள விண்ணப்பப் படிவத்தில் உங்கள் விபரங்களை பதிவு செய்து, எங்கள் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

மாதாந்தம் இந்த சஞ்சிகையை வாசித்த பின்பு மற்றவர்களு டனும் பகிர்ந்து கொள்ளுங்கள். கூடுமானவரை, தேவனை அறியாதவர்களுடன் இதனை பகிர்ந்து கொள்ளுங்கள். தேவ -னுடைய ஜீவ வார்த்தைகள், அந்தந்த நாளுக்கு மட்டுப்படுத் தப்பட்டவைகளல்ல.

தற்போது கிறிஸ்தவ ஆவிக்குரிய ஐக்கியமொன்றிலும் இணைந்திருக்காவிட்டால், எங்களுடன் சேர்ந்து தேவனை ஆராதிக்கும்படியாக உங்களை வரவேற்கின்றோம்.

**தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக் கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வள வாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்**. (யோவான் 3:16)

**கிருபையின் கூடாரம் அப்போஸ்தல சபை**

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909**

gtachurch.ca

உள்ளான மனிதன் மாதாந்த பிரதி

# விண்ணப்பப் படிவம்

முழுப் பெயர் FULL NAME:

முகவரி ADDRESS:

நகரம் CITY:

தபால் குறியீடு POSTAL CODE:

மாநிலம் PROVINCE:

தொலைபேசி TELEPHONE:

மின் அஞ்சல் E-MAIL:

விண்ணப்பப் படிவம் அனுப்பப்பட வேண்டிய முகவரி

**THE INNER MAN – GTAC**
**7700 MARKHAM ROAD**
**P. O. BOX 3052**
**MARKHAM, ON L3S 4T1**

MAIL THE APPLICATION FORM TO THE ABOVE MENTIONED ADDRESS

gtachurch.ca

gtachurch.ca

210 Silver Star Blvd., Unit 807, Scarborough, ON M1V 5J9

www.gtachurchnet.ca ☎ 416.613.2909